பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

O/L Dec 89
பகல் முழு நேர வகுப்பு
(காலை 8.00 — பி.ப 1.00)
புதிய/பழைய பாடத்திட்ட வகுப்புகள் [வெவ்வேறாக]
கடந்த கால விரிவுரையாளர்களுடன் மேலும் சில சிறப்பு விரிவுரையாளர்களின் போதனை
மார்ச் 29 முதல்
எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

# உதயன்

விலை ரூ 2.50

A/L 91
கலை / வர்த்தகம் விஞ்ஞானம்
யாழ் நகரின் பிரபல்யமான ஆசிரியர் குழுவினால்
ஏப்ரில் 03 இல் ஆரம்பம்
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை

சுடர் 4 விபவ ஆு பங்குனி மீ 03 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 07 (16 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-86

## ஈழத்தமிழர் விவகாரம்:

# ராஜீவுடன் கருணாநிதி நேற்று முக்கிய பேச்சு

## புதிய அணுகுமுறைக்கு வற்புறுத்து

புதுடில்லி, மார்ச். 16

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி, பிரதமர் திரு. ராஜீவ்காந்தியை நேற்றுச் சந்தித்து ஈழத்தமிழர்கள் பிரச்சினை குறித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.


ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி அப்போது வலியுறுத்தியதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய சந்திப்பு சாதகமான விளைவுகளுக்கான முதற்படியாக அமையக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்திய அமைதிப்படை நிபந்தனையில்லாத, நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி அதிலிருந்து பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே முதல்வர் கருணாநிதியின் நிலைப்பாடாக இருந்ததாகச் சொல்லப்பட்டது.

ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதிகள், ரெலோ அமைப்பின் பிரதிநிதிகள் இப்போது சென்னையில் உள்ளனர். அவர்கள் கருணாநிதியைச் சந்தித்திருந்தனர். இலங்கை சென்றிருந்த தி. மு. க.; எம். பி. திரு, வை. கோபாலசாமியும் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்திருந்தார். வடக்கு - கிழக்கு மாகாண முதலமைச்சர் இப்போது புதுடில்லியில் உள்ளார். அவரும் திரு. கருணாநிதியைச் சந்திக்க இருந்தார்.

இந்த வேளையில் நடந்த திரு. கருணாநிதி-ராஜீவ் பேச்சுக்கள், ஈழத் தமிழர் நிலையின் சரியான ஒரு நிலைப்பாட்டை பிரதமருக்கு எடுத்துச் சொல்ல உதவியிருக்கும் என்றே இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.



கருணாநிதி

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து தமிழர் பிரச்சினையைத் தீர்க்க அணுகுவது வாய்ப்பானது அல்ல என்ற கருத்தையும் திரு. கருணாநிதி பிரதமரிடம் முன்வைத்திருப்பார் என்றும் அதே வட்டாரங்கள் நம்புகின்றன.

திரு. கருணாநிதி வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங்கையும் சந்தித்துப் பேசினார்.

புதுடில்லியில் நடக்கும் நிதித்திட்டக் குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக திரு. கருணாநிதி, செவ்வாய்க்கிழமை மாலை சென்னையில் இருந்து புறப்பட்டார்.

அப்போது விமான நிலையத்தில், செய்தியாளர்கள் அவரைச் சந்தித்தனர்,

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாளை புதுடில்லியில் சந்திப்பீர்களா? என்று கேட்டதற்கு "அது மரியாதைச் சந்திப்பாக இருக்கும்" என்று திரு. கருணாநிதி பதிலளித்திருந்தார். (அ-எ)



ராஜீவ்

## பிறப்பு, இறப்பு சான்றிதழ் நேற்று ஆயிரம் விண்ணப்பம்

நேற்று சுமார் ஆயிரம் பேர் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களைப் பெற விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

யாழ் செயலக அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று றக்கா வீதியில் உள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் பிரிவில் இவை ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கடந்த ஆறு வாரங்களாக பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வது இடை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-5)

## வீடுகட்டவும் புனரமைக்கவும் நிவாரணம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 16

ஒருங்கிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கும், புனரமைப்பதற்குமான நிவாரணப் பணத்தை வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நன்கொடையைப் பெறத் தகுதியுடையவர்கள் என குடும்ப அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு இதற்கான விண்ணப் பப் படிவங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

யாழ். செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

இதுவரை சுமார் ஆயிரம் விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி கிராம சேவை அலுவலரின் ஒப்பத்துடன் மீள ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-5)

## ஒய்வூதிய அதிகரிப்பு; சுற்றுநிருபம் இதுவரை வரவில்லை

அண்மையில் அறிவிக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பை வழங்குவதுபற்றி திறைசேரியிடமிருந்து எவ்வித பணிப்புரையும் இன்னும் வந்துசேரவில்லை.

ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்ததாக யாழ். செயலக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

ஓய்வூதியப் பணத்தை 260 ரூபா அதிகரித்து வழங்குவதென மந்திரி சபையினால் தீர்மானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பு கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் அமுலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்த ஓய்வூதிய அதிகரிப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து சுற்றுநிருபம் எதுவும் திறைசேரியினால் அனுப்பப்படாமையினால் அதிகரித்த ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கை எதனையும் எடுக்கும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## யாழ். ஆஸ்பத்திரியில் போக்குவரத்துப் பொலீஸ்

### நேற்று இயங்கத் தொடங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ். கோட்டைக்குள் இயங்கும் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவு நேற்று முதல் யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப பிரிவுக்கென கூடுதலான பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். நகரில் தற்பொழுது வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவதையடுத்து விபத்து மரணப் பத்திரங்கள் வழங்குவதற்கும் -

வாகன உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு கோருவதற்கான அறிக்கைகளை வழங்குவதற்கும் - மக்கள் சௌகரியத்தைக் கருத்திற்கொண்டே இப்பிரிவு யாழ். ஆஸ்பத்திரிப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸ் அத்தியட்சகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பகுதியில் நாளாந்தம் வீதிவிபத்துக்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## 3 இளைஞர்கள் மரணம்; கோண்டாவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

கோண்டாவில் அன்னங்கைப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகலுக்குப் பின்னர் இடம்பெற்ற சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின் போது மூன்று இளைஞர்கள் உயிரிழந்தனர்.

அன்றைய தினம் காலை 10 மணி அளவில் கோண்டாவில், அன்னங்கை குமரகோட்டம் பகுதிகளை படையினர் சுற்றிவளைத்தனர்.

பின்னர் அங்குள்ள மக்கள் அனைவரையும் கோவில்களில் கூடுமாறு அறிவிப்பு விடுக்கப்பட்டது.

சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளின் போது துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் குடைசாய்ந்தது

### முல்லைத்தீவு பயணிகள் காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்று நண்பகலில் புதுக்குடியிருப்புக்கு அருகே மந்துவில் சந்தியில் குடைசாய்ந்தது. இதனால் பத்து பயணிகள் படுகாயமடைந்தனர். அவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பயணிகள் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர். (உ-126)

## காடுகளில் தேடுதல்

யாழ்ப்பாணம் மார்ச் 16

முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு காட்டுப் பகுதிகளில் அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

காட்டுப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன. (உ - 126)

## தெற்கில் இரு தினங்களில் 13 பேர் கொல்லப்பட்டனர்

கொழும்பு, மார்ச் 16

கடந்த இரண்டு தினங்களில் தெற்கில் நாட்டில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரம் பகுதியில் ஜே. வி. பி. தீவிரவாதிகள் என்று கருதப்படும் ஐந்து பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

பிரா இயக்கத்தினர் இவர்களைக் கொன்றிருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

பொலன்னறுவ மாவட்டத்தில் 4 பேர் ஜே. வி. பி. தீவிரவாத சந்தேக நபர்களால் கொல்லப்பட்டனர்.

மற்றொரு இடத்தில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

மத்திய மாகாணத்தில் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை ஆயுதப்படையினர் முற்றுகையிட்டு 300க்கு அதிகமான வெடிகுண்டு சாதனங்களைக் கைப்பற்றினர்.

மாத்தறை மாவட்டத்தில் ஆயுதப் படையினர் நடத்தி வந்த தேடுதல் வேட்டை நேற்றுமுன் தினம் முடிவடைந்தது.

தென் பகுதியின் ஏனைய மாவட்டங்களிலும் படையினர் தேடுதல் நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று ஏஜன்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

## 45 வயதுக்கு மேற்பட்ட

# 20 ஆண்டு சேவை புரிந்த ஆசிரியர்கள் ஓய்வு பெறலாம்

45 வயதைத் தாண்டிய-20 வருட சேவையைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் விரும்பினால், இப்பொழுது சேவையிலிருந்து ஓய்வு பெறலாம்.

இது தொடர்பாக கல்வித் திணைக்களங்களுக்குச் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்த வசதி ஆசிரியைகளுக்கு மட்டும் இருந்து வந்தது.

45 வயதில் ஓய்வு பெற்றாலும் கூட ஓய்வூதியம் 55 வயதைத் தாண்டிய பின்னரே கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

இத்தகைய ஆசிரியர்கள் இவ்வாண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியுடன் சேவையிலிருந்து ஓய்வு பெறக்கூடிய வாய்ப்பையும் வசதியையும் பெறுகிறார்கள். (உ-எ)

### சுபநேரம்

16 – 03 – 1989
பங்குனி– 03
வியாழக்கிழமை

சுபநேரம்:
07 – 51 முதல் 09 – 21 வரை

ராகுகாலம்:
01 – 51 முதல் 03 – 21 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

நவமி முற்பகல் 8.49 வரை

## இரு பொலீஸ் நிலையங்கள் மீது தாக்குதல்!

தென் பகுதியில் இரண்டு பொலீஸ் நிலையங்கள் மீது நேற்றுத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

கொழும்பில் நாரஹேன்பிட்டி பொலீஸ் நிலையம்மீது நேற்று இரவு 7-50 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமுற்றதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த நாரவில்ல பொலீஸ் நிலையமும் நேற்றுத் தாக்கப்பட்டது.

பொலீஸ் நிலையக் கட்டடத்துக்குச் சேதம் ஏற்பட்டது. (அ)

## விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்ற மினிபஸ் விபத்துக்குள்ளானதில் மூவர் காயம் அடைந்தனர்.

நேற்று வேலணை, அராலிச் சந்தியில் இச்சம்பவம் இடம்

(8 ஆம் பக்கம் பார்க்

## நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் நேற்று சபையில் சமர்ப்பிப்பு

கொழும்பு, மார்ச் 16

பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் புதிய வரவு செலவுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தைச் சமர்ப்பித்தார்.

அதன்படி—

எதிர்பார்க்கப்படும் வருமானம்; 5 ஆயிரத்து 500 கோடி ரூபா.

எதிர்பார்க்கப்படும் செலவீனம்: 10 ஆயிரத்து 700 கோடி ரூபா.

அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி பற்றிய விவரம் வருமாறு:-

நிதி அமைச்சு: 2 ஆயிரத்து 360 கோடி ரூபா.

இத்தொகையில் வறுமை ஒழிப்புக்கு ஆயிரம் கோடி ரூபாவும் சமூக, நல்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வறியவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அரசுவிதிக்கும் புதியவரிகள்; விவரம் இன்று வெளியாகும்

### 45 நிமிடத்தில் பிரதமர் விளக்குவார்

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைச் சமாளிக்க அரசு விதிக்கப் போகும் வரிகள் எவை?

இதுபற்றிய விவரங்கள் அடங்கிய உரையை நிதி அமைச்சர் என்ற முறையில் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க இன்று நாடாளுமன்றத்தில் வெளியிடுவார்.

நிதிஅமைச்சரின் உரை முன்னைய நிதி அமைச்சர்களுடையது போன்று மணித்தியாலக் கணக்கில் நீடிக்காது என்றும்-

45 நிமிடங்களில் அது முடிந்துவிடும் என்றும் நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## சிகரெட், மதுபான வகைகள் விலைகள் அதிகரித்தன

கொழும்பு, மார்ச் 16

சிகரெட், மதுபானவகைகள் மீதான வரிகள் செவ்வாய் நள்ளிரவு (புதன் அதிகாலை) முதல் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இப்பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

சிகரெட் ஒன்றின் விலை 15 சதத்தினாலும், ஒரு போத்தல் சாராயத்தின் விலை ஐந்து ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பியர் ஒரு போத்தல் 2 ரூபா ஐம்பது சதத்தினாலும் விஸ்கி, பிரண்டி ஆகியவை பத்துரூபாவினாலும் விலை அதிகரித்துள்ளன. (உ)

### முச்சந்தி முரளி



அப்ப... உந்தச்செய்தியைக் கேட்டா புகைக்கிறவையின்ரை வயிறு புகையும், குடிக்கிறவையின்ரை வயிறு எரியும் எண்டு சொல்லுங்கோ...!

## மீண்டும் தலைவரானார்

கொழும்பு, மார்ச் 16

பனைஅபிவிருத்திச் சபையின் தலைவராக திரு. கே. நடராசாவே மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

புதிய அரசு பதவிக்கு வந்த

[8 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

C 50, Chaly CF 50, GS 125, CB 250, Racoon 50 மோட்டார் சைக்கிள்களும், கோயில்களுக்குத் தேவையான பட்டுக்குடைகள், பூசைமணி, பெரிய மணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, கும்பத்துக்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம், தூபம், எவர்சில்வர் அலுமினியம், பித்தளைப் பொருள்கள், விளையாட்டுப் பரிசுக் கிண்ணங்கள், கேடயங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ், 297, K. K. S ரோட், யாழ்ப்பாணம். [9946]

ஆண், பெண் இரண்டு பொமெறியன் நாய்க்குட்டி உடன் விற்பனைக்கு உண்டு. ஒஸ்ரின் கார் E N விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. தியாகராஜா, 16, விநாயகர் வீதி, சுண்டுக்குளி. (9854)

சுக்கில வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விலை ரூபா 25/- திருக்கணித பஞ்சாங்கம் விலை ரூபா 23/- விற்பனையாகின்றது. வியாபாரிகள் நேரில் பெற்றுக்கொள்ளலாம். விற்பனையாளர்கள்:- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [9862]

றெக்கோடிங் பார் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு. Records, Master Cassettes, GX Deck, Amplifier, Record player Equalizer இன்னும் பல. நெல்லியடி சுப்பர் மாக்கட், நெல்லியடி, கரவெட்டி. [10061]

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொட்டடி, லேடன் பெனியன் தொழிற்சாலைக்கு அருகாமையில் சகல வசதிகளையும் கொண்ட 2 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க; 16, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். [10062]

## வீடியோ கமெரா விற்பனைக்கு

J V. C. 70E Title Model Sony 3000 வீடியோ கமெராக்கள் மற்றும் வீடியோ உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: Sun Video Complex, K K S Road, Thavady Junction, Thavady (C/1871)

## NEW CITY TRADERS

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள், சூட்கேஸ் Travelling bags, School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1840)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள்சேவற்குஞ்சுகள் Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள் ஒவ்வொரு புதன், வியாழக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9940)

Hyline Silver அமெரிக்கன் ஒரு கிழமைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. குஞ்சு ஒன்றின் விலை ரூபா 10.00 அத்துடன் 23-3-89இல் Hyline கறுப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், Indian River இறைச்சிக் கோழிக் குஞ்சுகளும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 112, 2-ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [9863]

## கோழிகுஞ்சு விநியோகம்

UPLANDS FARM

கறுப்பு (பிலிமத்) வரிச் சேவல் குஞ்சு (16-3-89) வியாழக்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (9944)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள் 15 ஆந் திகதி புதன் கிழமையும், Bairaha Farm புறொயிலர்குஞ்சுகள், பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், பிறவுண் சேவற் குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள் 16 ஆந் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (9939)

## கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) பிறவுண் சேவல் கறுப்பு [பிலிமத்] சேவல் குஞ்சுகள் சகாய விலைக்கு 16-ஆம் 17-ஆம், 18-ஆம், 19-ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். [புகையிரத நிலையத்துக்கு அண்மையில்] [10059]

## தேவை

உழவு இயந்திரம் திருத்தும் நிலையத்தில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள லேத்மென் உடனடியாகத் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும் இந்திரா என்ஜினியர்ஸ், 649, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [10060]

யாழ் நகரில் உள்ள எமது கிளை ஸ்தாபனத்துக்கு T V Deck, Radio, Motor winding போன்ற வேலைகட்கு வெற்றிடம் உள்ளது. தொடர்பு முகவரி: ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ், இல. 44, 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (9947)

## சேவை

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே! தங்களால் திருத்துவதற்காகத் தரப்பட்டு இற்றைவரை மீளப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கும் பணிக்கூடுகளை [1987/88 ஆம் ஆண்டுக்கு மட்டும் உரியவற்றைக்] காலம் தாழ்த்தாது 1-5-89க்கு முன்னர் வந்து பெற்றுக்கொள்ளவும். நன்றி. நிர்வாகம் ரதி வோச் வேக்ஸ். [9948]

## RAJZ BRAND தயாரிப்புக்கள்

வெளிநாடு செல்பவர்கள் தேடி வாங்குவது ''RAJZ BRAND'' எவர்சில்வர் தயாரிப்புகள் கீழைத்தேய மேலைத்தேய உணவு வகைகளை தயாரிக்கக்கூடிய பலவகை தாச்சிகள், ஸ்ரீமர்கள், Frying Pan கள், நீண்ட கைப்பிடி கொண்ட இருபக்கமும் கைப்பிடி கொண்ட Sauce Panகள் இன்னும் பற்பல உங்கள் தேவையைக் குறிப்பிடுங்கள். அது எதுவாயினும் நிறைவேற்றக் காத்திருக்கின்றார்கள் ''RAJZ BRAND'' உற்பத்தியாளர்கள். காட்சி அறை: S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். [C/1899]

## TYPE WRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

## அமெரிக்க விசா

அமெரிக்க விசா விண்ணப்பம் அமெரிக்காவில் கிடைப்பதற்கான திகதி நெருங்குகிறது. உரிய முறையில் அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் தயாரித்து உடன் கொடுக்கப்படும். இன்றே தொடர்பு கொள்ளவும்: க. ஜெயராஜசிங்கம், 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். [9870]

## SPOKEN ENGLISH

தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியையிட்டு புதிய பிரிவு ஆரம்பம் 23-3-89 செவ்வாய்/ வியாழன் நாட்களில். நேரம் 10.30 - 12.00 மணிவரை. S. B. Ivar, 12, வைமன் வீதி, நல்லூர். [9869]

## A / L 91 இரசாயனம்

108 Brown Road Jaffna A/L 91 ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்:- 19-03-89 ஞாயிறு 11 a.m. சனி, ஞாயிறு 11a.m பெயர்களைப் பதிவு செய்யவும். அசேதன இரசாயனம் பகுதி I நூல் 17-03-89 இல் வெளியாகும். [10056]

## கூ. சங்கம் சகல படிகளையும் வழங்குகிறது

அச்சுவேலி, மார்ச் 16

வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊழியர்களுக்கு வாழ்க்கைச்செலவுப் படி உட்பட அனைத்துப் படிகளையும் வழங்கி வருகின்றது என சங்கத்தின் தலைவர் திரு. ரி. கமலநாதன் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வாழ்க்கைச்செலவுப்படி 360 ரூபாவும் இந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இவர்களுக்கு வழங் ப்படுகின்றது. (இ10)

## பேடன் பவல் தினம்

யாழ்ப்பாணம் மார்ச் 16

சாரணர் இயக்கத்தின் தந்தையான பேடன் பவல் தினம் அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரியில் திரு.டி. குலத்துங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. (ச-111)

## செஞ்சிலுவைச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 16

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் வருடாந்த பொதுக் கூட்டம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் அர்ச். சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் (இ)

## வித்தியாலயத்துக்கு குடி தண்ணீர் வசதி

மண்டைதீவு. மார்ச். 16

மண்டைதீவு இந்து இளைஞர் திருமுறைக் கழகம் மண்டைதீவு மகாவித்தியாலய மாணவர்களுக்கு குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதற்கான கொள்கலன்களை மில்க்வைற் தொழில் அதிபர் சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா அன்பளிப்புச் செய்துள்ளார்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக இப் பகுதியில் குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. (ச-88)

## அன்னதான மடாலயம் திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச். 16

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயில் அன்னதான மடாலய திறப்புவிழா நாளை 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

11 மணியளவில் அம்பாளுக்கு விசேட அபிஷேகமும் புதிய மடாலயத்தில் அன்னதானமும் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியில் அகில இலங்கை சம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வாராது காணுன் கடை வழிக்கே' என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார். [இ-5]

## அச்சுவேலி அம்பாள் ஆலய திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச். 16

கதிரிப்பாய் அச்சுவேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இத் திருவிழாவில் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் சமயச் சொற்பொழிவுகள் இன்றும் நாளையும் அடுத்தநாளும் நடைபெறும்.

அத்துடன் 18 ஆம் திகதி சனிக்கிழமை கடந்த மார்கழிப் பாராயணத்தில் பங்குபற்றிய சிறுவர்களுக்கு இடைக்காடு இந்து இளைஞர் கழகத்தினரால் பரிசில்கள் வழங்கப்படும். (க)

---

✱ எமது நேற்றைய வெளியீடு ✱

✱ சத்தியராஜின்

★ தாய் நாடு

(பிரமிட் ஒறிஜினல்)

படப்பிரதிகளை உடன்பெற்றுக் கொள்ளலாம்

✱ புதிய சினிமாப் பட போஸ்டர்கள் விற்பனைக்குண்டு

# உஷா சினிமா

162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (9871)

---

# ★கொம்பியூட்டர் பயிற்சி★

**Diploma in Data Processing & Computer Programming Course**

BASIC 17-3-89 (Mon & Fri) (MODULE - III) 9.00 a.m

COBOL 18-03-89 (Sat & Sun) 10.00 a.m

1st Payment: Rs. 400/-

✱ மல்லாகம் கிளையில் 17-3-89 (3.30 p.m) இற்கு நடைபெறும்.

**IDP** Computer Centre 342, K. K. S Road, JAFFNA. (சிவன் கோயிலடி)

Branch: 7th Mile post K. K. S Road, JAFFNA.

[C-1920]

---

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### சி. ஞானப்பிரகாசம் முருய்ஸ்

(ஆசிரியர், அதிபர்)

சேயாய்: 16 - 01 - 1935 சேவைக்காய்: 14 - 02 - 1989

பதினாறு செல்வங்கள் நீ பெற்றாய்
பார்போற்ற அவர்களுக்குப் பொறுக்கவில்லை மனம்
கொடுத்துச் சிவந்த மென்கரத்தை - தடுத்து
சிதைக்க வென சூழ்ந்து கொண்டார் அம்மனிதர்
குண்டுகளுக்கு இரையாஞய்
வந்தவர்களுக்குப் பரிசாக
பொன்னுடலை ஈந்தாயோ?
அழியாத வெள்ளை உள்ளம்
அன்பு மொழி சொல்லினிமை
கேட்போரை மகிழ்விக்கும் சொல்லாடல்
சிமான் அளித்திட்ட
இளங்குமரா ஞானப்பிரகாசம்!
நினைக்கின்ற நெஞ்ச மெல்லாம்
உருக்குதையா செந்நீரை
வேடன் கை மான் ஆனாய்
வேண்டுமா இது உனக்கு?
டடா என அழைப்போம்
ஆர் கரையார் உங்கள் மொழியில்!
காந்திக்கும் ஓர் கோட்சே
சாந்திக்கே தலை சாய்த்த நின் தனக்கும்
அது தானோ?
நீங்கள் தந்ததோ வெந்துயரம் எங்களுக்கு
ஈசனே ஈந்திடுவான் நின் தனக்கு
நிறைவான ஆத்மசாந்தி.

தங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்:
அன்பு உள்ளங்கள்
தாய், மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

1-ஆம் வட்டாரம்,

[10015]

---

# NIRU TUITION CENTRE

STATION ROAD, KONDAVIL.

புதிய பழைய பாடத்திட்டத்திற்கான

## G. C. E. (A/L) 91

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்

16. 03. 1989 இல் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| பௌதிகவியல்: | திரு. சௌந்தி |
| இரசாயனவியல்: | திரு. செல்வா |
| தாவரவியல்: | திரு. பாலா |
| | திரு. ஈசன் |
| விலங்கியல்: | திரு. ஞானம் |
| தூய / பிரயோக } கணிதம் | திரு. கிருஷ்ணா |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் |
| பொருளியல்: | திரு. சின்னத்தம்பி |
| வர்த்தகவியல்: | திரு. தேவா |
| புவியியல்: | திரு வேலா |
| அரசியல்: | திரு மஃறூப் |
| அளவையியல்: | திரு. S மனோகரன் |
| இந்துநாகரிகம்: | திருமதி அருள்நங்கை |
| தமிழ்: | திரு. குழந்தை |
| வரலாறு: | பிரபல ஆசிரியர் |

மேலதிக விபரங்களுக்கு: நிர்வாகி.

(C/1862)

---

# BITSMANS INSTITUTE, MANIPAY.

## A/L 91

கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள் எமது வழமையான ''Super Grade'' ஆசிரிய குழுவினரால்

ஆரம்பம்: 17-03-1989

FRI 4-00 p.m

(விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன)

(10018)

---

## நன்றி நவிலல்



செல்வி

### கனகரத்தினம் மஞ்சுளாதேவி

படைப்பு: 07 - 05 - 1968 அழிப்பு: 16 - 12 - 1988

வீரத்தாயின் அன்புத் தலைமகளே!
உன் தோழர் தோழியர் பாசத்தால்
உன்னை மஞ்சு என்று அழைக்க
எனது வயோதிப நேரத்தில்
என்னைக் காப்பாய் எனக்கனவு காண
நீயோ!
மக்களுக்காய் மண்ணின் நலனுக்காய்
விடுதலை உணர்வு கொண்டு - உன்
தோழர் தோழியரைக் காப்பதற்காக
உன் தம்பியர் இருவரையும் மறந்து
ஒரு நொடியில் உன் இன் உயிரை
விட்டாய் - என மகளே!
நீ சென்ற இடத்திற்கு
என்னை அழைக்கும் நாள் எந்நாளோ?

எனது மகளின் மரணச் சடங்கிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் நேரில் பங்குபற்றியவர்களுக்கும் அஞ்சல்கள் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

உன் சிநேகித சிநேகிதர்கள் உன் பிரிவால் வாடுகின்றார்கள்.

அன்பு மகளே! உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்

தாயார், சகோதரர்கள், பெரியம்மா, சின்னம்மா, தாத்தா, மாமன் (வர்த்தகர், வெள்ளைவாய) சீரத்தினம் தம்பதிகள்.

அல்வாய். [9872]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நலிந்த பிரிவு மக்களுக்கு கடன் வழங்க இலங்கை வங்கி திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 16

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவு மக்களின் நல்வாழ்வுக்காக இலங்கை வங்கி தொழில் முயற்சிக்கான கடன்களை வழங்கும் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கை வங்கியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி, வறுமை ஒழிப்பு நிவாரணத் திட்டத்தின் கீழ் இக் கடன் வழங்கப்படவுள்ளது.

அரசியல் சார்பற்ற சமூக அமைப்புகள், இளைஞர் மன்றங்கள், மகளிர் அமைப்புக்கள், ஆகியவற்றின் ஊடாக இந்தக் கடன்கள் வழங்கப்பட உள்ளன.

பாதிக்கப்பட்ட ஒருவர் ஆகக் குறைந்தது 3 ஆயிரம் ரூபாவை இத் திட்டத்தின் கீழ் கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடன்களைப் பெற்றுக் கொள்ள விரும்பும் இளைஞர் மன்றங்கள், மகளிர் மன்றங்கள் போன்ற சமூக அமைப்புகள் அருகில் உள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரைச் சந்திக்குமாறு யாழ். மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மக்கள் கடனைப் பெற்று என்ன செய்கிறார்கள் என்பதை மேற்பார்வை செய்வதும்- கடன் திட்டத்தின் கீழ் சுயதொழில் வேலை வாய்ப்புக்கு பயிற்சி வழங்கப்படுவதும் சமூக அமைப்புக்களின் கடமை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## புதிய கல்வி அதிகாரி

வல்வெட்டித்துறை மார்ச் 16

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி யாக நியமிக்கப்பட்டிருக்கும் பொன்னம்பலம் வீரபத்திரன் தமது கடமைகளை கடந்த 10-ஆம் திகதி பொறுப்பேற்றார், (உ - 160)

## பிரிவுபசார விழா

சாவகச்சேரி நகரசபையில் கடந்த ஆறுமாத காலமாகத் தொழிற்பயிற்சி பெற்று வெளியேறிய பதின்மூன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு நகரசபை ஊழியர்களால் பிரிவுபசார விழா ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

நகரசபைச் செயலாளர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ம, வரதராசா, அ. க. ஏனுதிநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

மாணவர் சார்பில் செல்வி செ. பிரேமா நன்றியுரை வழங்கினார். (க-117)

# எட்டு ஊழியர் இடமாற்றம்

வவுனியா, மார்ச்.16

வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் கடந்த ஐந்து வருடங்களாகக் கடமையாற்றி வந்த எட்டு ஊழியர்கள் தற்போது வடக்கின் பல இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

அஞ்சல் அலுவலக மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு. கே. கந்தசாமி வல்வெட்டித்துறைக்கு பிரதம அஞ்சலதிபராக பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

திருவாளர்கள் கே. பூபாலசிங்கம் சுழிபுரத்துக்கும், வி. எஸ். மயில்வாகனம் பரந்தனுக்கும், பி. சுப்பிரமணியம், கே. சிவானந்தன் ஆகியோர் சாவகச்சேரிக்கும், எஸ். செல்வராஜா கிளிநொச்சிக்கும், எஸ். கிருஷ்ணபிள்ளை பருத்தித்துறைக்கும், எஸ். விஜயசுந்தரம் யாழ்ப்பாணத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்குப் பதிலாக திருவாளர்கள் ரி. புவனேஸ்வரன் (கொழும்பு மத்திய பரிவர்த்தன நிலையம்), பி. யோகநாதன் (கொழும்பு - 12), கே. தவராஜா (அட்டன்), ஏ. கோபாலகிருஷ்ணன், சோமசுந்தரம், கே. வேலுப்பிள்ளை, எஸ். வைத்தீஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் வவுனியாவுக்கும் இடமாற்றம் பெற்றுள்ளார்கள். (இ-164)

## சாரணர் பயிற்சிகள்

மானிப்பாய், மார்ச் 16

சாரணர் குழு ஒன்றை எவ்வாறு ஆரம்பித்து நடத்துவது சாரணர்களுக்கான ஆரம்ப பயிற்சியை அளிக்கும் முறை என்ன? என்பன தொடர்பான விளக்கங்களும் பயிற்சிகளும் (அறிமுகப் பயிற்சி) இம்மாதம் 22-ஆம், 23-ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

சாரணர் இயக்கத்தின் இரண்டாம் கட்டப் பயிற்சிகள் (ஆதாரப்பயிற்சி) இம்மாதம் 22-ஆம், 23-ஆம், 24-ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. நா. போஜன் பாடசாலை சாரணர் ஆசிரியர்களுக்கு அறிவித்துள்ளார். (க-90)

# கலைத் திறனுக்குப் பாராட்டு

"ஓர் ஆலயத்துக்குத் தேர் முக்கியமானது. அதேபோல தூல லிங்கமாகிய கோபுரமும் இன்றியமையாதது, கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். கலையை வளர்க்கும் நோக்கமாகத் திரு. தம்பித்துரை கோயிற்கடவைப் பிள்ளையாரின் தேரை அழகுறப் புனர் நிர்மாணம் செய்திருப்பது பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்"

கரவெட்டி கோயிற்கடவைப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவின் போது தேரைப் புனர் நிர்மாணம் செய்த கலாகேசரி ஆ. தம்பித்துரையைப் பாராட்டும் வைபவத்தில் உரையாற்றும் பொழுது ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் அதிபர் திரு. இ. வீரவாகு விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

கல்வி அதிகாரி திரு. ஆ.வ. தங்கராசா உரையாற்றுகையில் "நம் நாட்டுக் கலைஞர்களை நாம் கௌரவிக்க வேண்டும். எமது கோயில் தேரைச் செப்பனிட்டு அழகு படுத்தித் தந்த கலாகேசரி தம்பித்துரைக்கு எங்கள் ஊர் பொது மக்கள் சார்பில் "கலாசாகரம்" என்ற பட்டத்தை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்" என்று கூறி பட்டத்தை வழங்கினார்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம இயக்குனர் சுவாமி சித்ரூபானந்தா திரு, தம்பித்துரைக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ச)

# ,தமிழரின்சுயநிர்ணயஉரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்'

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தின் செயலாளர் எச். என். பெர்னாண்டோ இது சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில், மத்திய குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

★ இலங்கை — இந்திய ஒப்பந்தம் கிழித்தெறியப்பட வேண்டும்.

★ வடக்கு, கிழக்கில் இருந்து இந்திய அமைதிப் படையை வெளியேற்ற வேண்டும்.

★ அரசாங்க பயங்கரவாதத்தையும், தனியார் பயங்கரவாதத்தையும் தோற்கடிக்க ஒன்றுபட வேண்டும். (அ)

# இராமநாதன் கல்லூரியில் முன்னாள் அதிபர்களுக்கு பாராட்டும் நினைவஞ்சலியும்

யாழ்ப்பாணம், மார்ச் 16

இராமநாதன் கல்லூரி முன்னாள் அதிபர்களாக விளங்கிய திருமதி த. முத்துக்குமாரு, செல்வி யோ. கனகசபை ஆகியோரின் மறைவை ஒட்டி மேற்படி கல்லூரியில் நடேசர் அபிஷேகமும், நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றன.

கூட்டத்தை அதிபர் திருமதி குமாரசாமி தேவாரம் மௌன அஞ்சலியுடன் அன்னார்களது சேவையைப் பாராட்டி ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து திரு. ந.ம.சிவப்பிரகாசம் (இளைப்பாறிய சட்டத்தரணி), இளைப்பாறிய அதிபர்கள் திருமதி அருணசலம், திருமதி யோ. இராசரட்னம், திருமதி நா. சோமசுந்தரம், பழைய மாணவியும் இளைப்பாறிய ஆசிரியையுமாகிய திருமதி சகிதேவி கந்தையா ஆகியோர் உரையாற்றினர்.

கல்லூரி ஆசிரியை செல்வி யோ. செல்லையா பிள்ளை மறைந்த இரண்டு அதிபர்களுக்கும் விருப்பமான தேவார திருவாசகங்களையும், திருப்புகழ் பாடல்களையும் பாடினார். (க)

## வறுமை ஒழிப்பு கருத்தரங்குகள்

தாளையடி மார்ச் 16

வடமராட்சி கிழக்கில் ஜனாதிபதியின் ஜனசவிய வறுமை ஒழிப்புத்திட்ட குழுக்களுக்கான இரண்டு நாள் பயிற்சிக் கருத்தரங்குகள் 18-ஆம் திகதி தொடக்கம் 23-ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 20-ஆம் 21.ஆம் திகதிகளில் செம்பியன்பற்று கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 5 குழுக்களுக்கு செம்பியன்பற்று அ. த, க. பாடசாலையிலும், மருதங்கேணி கிராமசேவையாளர் பிரிவில் உள்ள 6 குழுக்களுக்கு மருதங்கேணி இந்து வித்தியாலயத்திலும் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெற வுள்ளன.

22-ஆம் 23-ம் திகதிகளில் உடுத்துறை கிராமசேவையாளர் பிரிவிலுள்ள 6 குழுக்களுக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திலும், முள்ளியான் போக்கறுப்பு, சுண்டிக்குளம் கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள 7 குழுக்களுக்கு கட்டைக்காடு றோ. க. பாடசாலையிலும் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெறும்.

பயிற்சிக் கருத்தரங்குகள் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரையும் நடைபெறும்.

இதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் மேற்கொண்டுள்ளார். (சி - 144)

---

உ

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



## துசிக்கா (Thushiga)

மயிலிட்டியைச் சேர்ந்த மோகனதாஸ் சந்திரபவானி தம்பதிகளின் தவப்புதல்வி துசிக்கா 16-03-89 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை நெதர்லாந்தில் அவரது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவளை அப்பப்பா, அப்பம்மா, அம்மய்யா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார் மற்றும் பேரன்மார், பேத்திமார், பூட்டன்மார், பூட்டிமார், சித்தப்பாமார் சித்திமார், ரதீஸ் அண்ணா, மிதிலன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர்கள் அம்பாள், முருகன் அருள் பெற்று நீடூழி காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறார்கள். [10012]

---

## காரைநகர் - மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயில் அன்னதான மடாலயத் திறப்புவிழா

நாளை 17- 3- 89 வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு திறப்புவிழா நடைபெறவுள்ளது. காலை 9. 30 மணிக்கு "செஞ்சொற் கொண்டல்" இ. ஜெயராஜ் அவர்கள் (அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர்) "வாராதுகாண் கடைவழிக்கே" என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்கள். 11. 00 மணிக்கு அம்பாளுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று அடியார்களுக்கு புதிய மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

திருப்பணிச்சபை

(C/1932)

---

## 89 - விஞ்ஞான மாணவர்கட்கு

காந்த விளைவுகள்

ஆரம்பம்: 18- 03 - 1989

SAT SUN 3 - 4

ஆசிரியர் MR. ரவிந்திரநாதன் B. Sc.

3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C/1913)

---

## விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

O/L DAY CLASSES (OLD, NEW SYLLABUS) (8.30 - 1.30)
EVENING CLASSES (3.00 - 5.00)

ஆண்டுகள்: 10, 9, 8, 7, 6ஆம்

புதிய பிரிவு ஆரம்பம்:- 15 - 03 - 1989

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

விஞ்ஞானம் - திரு. சூரி ஆங்கிலம் - திரு. விஸ்வநாதன்
கணிதம் - திரு. செல்வா சமூகக்கல்வி - திரு. கருணாகரன்
திரு. சுந்தரமூர்த்தி
தமிழ், சமயம் - திரு: திருப்பதி

மு. கு:- கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் செயற்படும் ஒரே நிறுவனம்.

---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி கிழக்குக்கு:

# தனியான ஒரு கூட்டுறவுச் சமாசம்

தாளையடி, மார்ச் 16
வடமராட்சி கிழக்குக்குத் தனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கசமாசம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கீழ் இருக்கும் 12 கிளைகளையும், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கீழிருக்கும் 8 கிளைகளையும் உள்ளடக்கியதாக வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம் அமையவிருக்கிறது.

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் பணிப்பின் பேரில் யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம் இந் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர், கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில், வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள கிளைகள் தனியாகப் பிரிந்து செல்ல நடவடிக்கை எடுக்கும்படியும்—

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச்சமாசத்தை வடமராட்சி கிழக்கின் கேந்திர ஸ்தானமான மருதங்கேணியில் திறக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுள்ளார். (ச-144)

## விநியோகம்

புன்னாலைக்கட்டுவன் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பலருக்குகடந்தவாரம்மண் வெட்டிகள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'முதலைமார்க்' மண்வெட்டிகளே வழங்கப்பட்டன.

மண்வெட்டி வழங்கும் வைபவத்தில் உடுவில் கமநலச் சேவை நிலையத்தின் மேற்பார்வையாளர், யாழ். மாவட்ட தலைமை அலுவலக உயரதிகாரிகள்: உடுவில் பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (இ-90)

## ஜனசவிய குழுக்கள்

தாளையடி, மார்ச் 16
வடமராட்சி கிழக்கில் 35 ஜனசவிய வறுமை ஒழிப்புத் திட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் தலைமையில் கிராம ரீதியாக நடைபெற்ற கூட்டங்களில் பொதுமக்களால் இக்குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழுவும் 5 உறுப்பினர்களைக் கொண்டதாகவுள்ளது.


குழுக்களுக்கு உதவும் முகமாக குழு ஒவ்வொன்றுக்கும் வெளிநிலை முகவர் ஒருவரும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ள அரசு உத்தியோகத்தர்களே வெளிநிலை முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-144)

## நிவாரண பார்சல்

தாளையடி மார்ச் 16
வடமராட்சி கிழக்கில் உள்ள வறிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்களையுடைய பார்சல்கள் வழங்கப்படவுள்ளன.

இப் பார்சல்களை செஞ்சிலுவைச் சங்கம் வழங்க உள்ளது.

வறிய குடும்பங்கள் பற்றிய விபரங்கள் கிராம சேவையாளர்களால் திரட்டப்பட்டுள்ளன. (க-144)



கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இடமாற்றம் பெற்றுள்ள திரு. எஸ். ஐ. நித்தியராஜுக்கு, சம்மாந்துறையில் பிரிவுபசார வைபவம் ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

கல்முனை மாவட்ட சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ சம்மாந்துறைக் கொத்தணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வைபவம், சம்மாந்துறை மத்திய கல்லூரி அப்துல்மஜீத் மண்டபத்தில் நடைபெற்றது.

வைபவத்தில் கல்முனை மாவட்ட சி. க. உ. கூ. ச. சமாஜத்தலைவர் ஜனாப் ஐ. ஏ. ஜப்பார், சம்மாந்துறை கொத்தணி சார்பில் நினைவுப்பரிசாக திரு. நித்தியராஜுக்கு தங்கப் பதக்கம் அணிவிப்பதை படத்தில் காணலாம். (இ-14)

## சென்றலைட்ஸ் வெற்றிக் கேடய மென்பந்துச் சுற்றுப் போட்டி

சென்றலைட்ஸ் வெற்றிக் கேடயத்திற்கான 8 ஆவது ஆண்டு மென்பந்து கிரிக்கெட் போட்டி ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினரால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவிரும்பும்விளையாட்டுக் கழகங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த துடுப்பாட்டவீரர், சகலதுறை வல்லுனர், சிறந்த பந்துகாப்பாளர் ஆகிய விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (இ-5)

## ஜனசவிய பயிற்சிநெறி

வேலணை, மார்ச். 16
வறுமை ஒழிப்பு "ஜனசவிய" திட்டம்பற்றி பயிற்றுவிப்பவர்களுக்கு மாவட்ட ரீதியில் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பயிற்சி நெறி நடைபெறுகின்றது.

இப்பயிற்சி நெறிக்கு யாழ் மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு 5 பேர் என்ற விதத்தில் 65 பேர் அழைக்கப்பட்டிருக்கிருர்கள் (க - 167)

---

மாந்தை தெற்கு ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)
உயிலங்குளம்

## முக்கிய அறிவித்தல்

### அங்கத்தவராகச் சேர்தலும் வாக்காளர்இடாப்பின் முடிவுறுத்தலும் 31.03.1989

எமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான வாக்காளர் இடாப்பு 31-03-1989 உடன் முடிவுறுத்தப்படும், வாக்காளர் இடாப்பில் இடம்பெறவிரும்புவோர் 31-03-1989-க்கு முன் ரூபா 10/- செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்துகொள்ளலாம்.

பத்து ரூபா பங்கு, பூரணப்படுத்தப்படாத பழைய அங்கத்தவர்கள் மீதிப்பணத்தைக் கட்டி பங்கினைப் பூரணப்படுத்துமாறும் அறியத்தருகின்றோம்.

31-03-1989க்குப்பின் சேரும் அங்கத்தவர்கள் எவரும் அடுத்து வரும் காலாண்டுக்குட்பட்ட வாக்காளர் இடாப்பில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள். அங்கத்துவ விண்ணப்பப் படிவங்களை உங்கள் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்கள் தேவைப்படின் உங்கள் கிளை முகாமையாளர் அல்லது பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

குறித்த 31-03-1989 ஆம் திகதியுடன் முடிவடையும் வாக்காளர் இடாப்பை வைத்தே கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும்.

04-03-1989

இங்ஙனம்
தங்கள் கூட்டுறவுச் சேவையிலுள்ள
க. துரைராசசிங்கம்
(செயலாளர்)

(C/1649)

---

வட மாகாண
தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாசம் (ம. ப)
330, கே. கே எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடங்கள்

1. பொது முகாமையாளர் தரம் 101-6

கல்வித்தகைமை:- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பரீட்சையில் சித்தி அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் ஆறு வருடத்திற்குக் குறையாத முகாமையியல் அனுபவம்.

சம்பளம்:- 800 - 40 x 5 : 50 x 5 - 1250.
இதன்கீழ்க் கொண்டுவரப்படும் புதிய சம்பளத்திட்டத்தின் படி சம்பளமும், படிகளும் வழங்கப்படும்.

2. எழுதுனர் தரம் 302/10.

கல்வித்தகைமை:- க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி உயர்தரத்தில் சித்தியடைந்தவர்.

சம்பளம்:- 350 - 15 x 7 : 20 x 8 - 615.
இதற்கமைய புதிய சம்பளத்திட்டத்தின் கீழ் சம்பளம் வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் 25 - 03 - 89 க்கு முன் தலைவர், வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம், 330, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
வட மாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்,
யாழ்ப்பாணம்.

[C-1603]

---

A/L - 91ஆம் ஆண்டு விஞ்ஞான மாணவர்களுக்கு
இரசாயனவியல்
ஆரம்பம்: 18-03-1989
SAT SUN — 3 4 p. m
ஆசிரியர் MR. நாகரட்னம் B. Sc
மணல்தரை லேன், கந்தர்மடம்.
(C/1916)

---

## பதவி வெற்றிடங்கள்

(1) கணக்காளர் (Book Keeper)
(2) விடுதித்தலைவர் (மாணவர் மேற்பார்வையாளர்) (ஆண்
(3) பாக (சமையல்) சாலை முகாமையாளர்
(4) நூலகர்
(5) பாலர் பாடசாலை ஆசிரியர்கள்
(6) பல்துறைகளிலும் பயில விரும்புவோர் (Trainees)
(7) சங்க வளர்ச்சிக்கு உதவ விரும்பும் தொண்டர்கள் (Volunteers)
(8) ஆலோசகர் (Consultors)
(9) தொழில் துறை வல்லுனர்கள் (Development Professional)
(10) ஆசிரியர்கள் ஆங்கிலம், தமிழ்

உங்கள் முழுத்தரவுடன் (Bio Data) தராதரம் (Qualification) ஆகியவைகளுடன் 25-03-89க்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

சம்பளம்:- தகுதியடிப்படையில் நேரில் முடிவு செய்யலாம்.

தலைவர்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

[C-1551]

---

எமது நேற்றைய சிறப்பு வெளியீடுகள்
சத்யராஜ் - ராதிகா - ஸ்ரீவித்யா
(இரு வேடம்)
தாய்நாடு
(PYRAMID ORIGINAL)
ரகுவரன்- ரேகா- சரண்ராஜ்
குற்றவாளி
(PYRAMID ORIIGNAL)
அடுத்த வெளியீடு:
கார்த்திக், குஷ்பூ- ஜனகராஜ்- பாசிலின்
வருஷம் 16
(ORIGINAL))
குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[C-1552]

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்
## தனபாலசிங்கம் சத்தியேந்திரா
(மருத்துவபீட முதலாம் வருட மாணவன்)

படைப்பு: 07- 11- 1965
அழிப்பு: 02- 02- 1989


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சம்பவத்தின் போது அமரத்துவமடைந்து எம்மை அதிர்ச்சியிலும், மீளாத்துயரிலும் ஆழ்த்திய எங்கள் அன்பு மகனின் அந்தியேட்டிக் கிரியைகள் 16- 03- 1989 காலை கிரிமலையிலும், வீட்டுக் கிரியைகள் 18- 03- 1989 பகல் எமது இல்லத்திலும் நடைபெறும். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிக்கொள்ள உற்றார், உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர், சகோதரர்கள்.

64, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(9868)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## வல்லிபுரம் மாணிக்கம்
(வர்த்தகர்)

தோற்றம்: 28-08-1932
மறைவு: 27-03-1988
திதி: 16-03-1989

அன்பாலும், பண்பாலும், பாசத்தாலும் வழிநடத்திய
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
ஆண்டொன்று சென்றாலும் அணையாத விளக்காய்
எமதுள்ளத்தில் ஒளிவீசும் எங்கள் அன்புத்
தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

சரவணை மேற்கு,
வேலணை.
(9995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைப் பெறுபேறுகளை வைத்து
# பாடசாலைகளை எடை போடக்கூடாது
## கொக்குவில் இந்து அதிபர் பேட்டி

யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் பெருகி வரும் பிரச்சினையாக இருந்து வரும் பெரியகல்லூரிகளில் மாணவர்களுக்கு அனுமதி தேடும் பிரச்சினை சம்பந்தமாக வளர்ந்து வரும் அரசாங்கக் கல்லூரிகளில் ஒன்முன கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தைப் பேட்டி கண்டோம்.

திரு. பஞ்சலிங்கம் ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர் இவர் 1985 ஆம் ஆண்டு டெல்லியில் கல்வி நிர்வாகிகளுக்காக நடத்தப்பட்ட கல்வி நிர்வாகமும் திட்டமிடலும் என்னும் பயிற்சிக்கு வடமாகாணத்திலிருந்து கல்வித் திணைக்களத்திஞல் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரே ஒருவர் ஆவார்.

அதிபர் பஞ்சலிங்கம் கல்லூரி அனுமதிப் பிரச்சினைபற்றி எம்மிடம் கூறிய கருத்துக்களை வாசகர்கள் முன்வைக்கிறோம்.

கேள்வி:- நீங்கள் உங்கள் கல்லூரியில் 6 ஆம், 12 ஆம் ஆண்டுகளுக்கு மாணவர்களைச் சேர்க்கும் முறையை அறியலாமா?

பதில்:- நிச்சயமாக. ஆறும் ஆண்டுக்கு நாங்கள் கல்வித் திணைக்களத்தின் சுற்று நிருபத்துக்கு அமையவே மாணவர்களை அனுமதிக்கின்றோம். மாணவர்களை அனுமதிப்பதற்குப்பரீட்சை ஒன்று நடத்தப்படுகிறது. அந்தப் பரீட்சைப் பெறுபேற்றைக் கொண்டு திறமையின் அடிப்படையில் 60 சதவீதமான மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். எமது பாடசாலையில் தற்பொழுது கல்வி கற்கும் மாணவர்களின் சகோதரர்கள் 20 சதவீதமும் பழைய மாணவர்களின் பிள்ளைகள் 20 சதவீதமும் அனுமதிக்கப்படுகின்றன.

கேள்வி:- 'பெரிய' பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு நன்கொடை[Donation] வழங்கப்படவேண்டுமென்றும் நன்கொடை வழங்கப்படாவிட்டால் அனுமதி மறுக்கப்படுவதாகவும் வாசகர்களில் ஒருவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். "டொனேசன்" வழங்கப்படாத காரணத்திற்காக நீங்கள் எப்பொழுதாவது ஒரு மாணவனுக்கு அனுமதி வழங்க மறுத்ததுண்டா?

பதில்:- இல்லை. எமதுபாடசாலையில் ஆறும், பன்னிரண்டாம் வருடங்களில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கான பட்டியல் வெளியிடப்பட்ட பின்பு நாம் அம்மாணவர்களின் பெற்றோர்களை அழைத்து ஒரு கலந்துரையாடலை நடத்துகின்றோம். அக்கலந்துரையாடலில் எமது பாடசாலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. எமது பாடசாலை இராணுவத் தாக்குதலுக்கு உட்பட்ட ஒரு பாடசாலை. எமது தளபாடங்களும் மற்றும் உபகரணங்களும் நாசமாக்கப்பட்டன. இது யாவரும் அறிந்த விசயம். ஆகவே கலந்துரையாடலின் பின் பெற்றோர்கள் தாமாகவே முன்வந்து பண உதவி செய்கின்றனர். மாணவர்களைக் கட்டாயப்படுத்தி நாம் எக்காலத்திலாவது நன்கொடை பெற்றதுமில்லை, பெறப்போவதும்இல்லை. நன்கொடை வழங்காததற்காக நாம் ஒரு பொழுதாவது அனுமதி மறுத்ததில்லை.

கேள்வி:- முன்னைய காலங்களிலும் பார்க்க இப்பொழுது உங்கள் பாடசாலையில் அனுமதி பெற அதிகமான மாணவர்கள் விண்ணப்பிக்கிறார்கள் என அறிகின்றோம். ஏனென்று கூறமுடியுமா?

பதில்:- எமது பாடசாலையில் முதலாவதாக கல்லூரி சமூக உறவு வலுப்பெற்று வருகிறது. ஆசிரியர்கள் திறமையாகக் கடமையாற்றுகிறார்கள். இதனால் சிறந்த ஒரு சூழ்நிலை (Climate) உருவாகி வருகிறது. அத்துடன் ஆசிரிய மாணவர் தொடர்பு மிகவும் நெருங்கியதாகவுள்ளது எங்கள் பரீட்சைப் பெறுபேறுகளும்...... (நான் இடைமறித்து ஆம். ஆம். உங்கள் கல்லூரியின் ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறு பற்றி 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் பாராட்டப்பட்டிருந்ததே)

அதிபர்:- [தொடர்ந்து] நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு பாடசாலையின் தரத்தைப் பரீட்சைப் பெறுபேறுகளைக் கொண்டு எடைபோடக்கூடாது. புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்வுபெற்றவர்களும் அனுமதிப் பரீட்சையில் 60 – 65 சதவீத உயர் புள்ளிகளைப் பெற்றவர்களுமான மாணவர்களையே நாம் இன்று பெரிய கல்லூரிகளில் சேர்க்கிறோம். முதல்தர மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் முதல்தர பெறுபேறுகள் கிடைப்பது வியப்பில்லையே. பத்திரிகைகளில் மாணவர்களின் முழுமையான அபிவிருத்தியை Over all Development of the child) வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளுக்கும் பெறுபேறுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எனது தனிப்பட்ட கருத்து என்னவெனில் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற மாணவனின் திறமை 70 - 80 சதவீதம் உதவுகிறது.

கேள்வி:- பெற்றோர்கள் 'பெரிய' பாடசாலை என்ற விரும்பிலல் ஒரு சில பாடசாலைகளிலேயே தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெற முனைகின்றனர். பெற்றோர்களின் இந்த மோகத்தை குறைப்பதற்கு கையாளக்கூடிய சில வழி வகைகளைக் கூறுவீர்களா?

பதில்: இன்றைய முக்கிய பிரச்சினை இதுதான். எல்லாப் பெற்றோர்களும் இங்குள்ள இரண்டு மூன்று 'பெரிய' பாடசாலைகளில் தமது பிள்ளைகளுக்கு அனுமதி பெற விரும்புகிறார்கள். இந்த மனவிருப்பமே மாணவர்கள் அனுமதியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு மூலகாரணமாகும். சமூகத்தில் மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படுபவர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறிப்பிட்ட இரண்டு மூன்று 'பெரிய' பாடசாலைகளில் சேர்க்க முனைகின்றனர். இதனால் சமூகத்தில் வசதி படைத்தவர்களுக்குக் குறிப்பிட்ட சில பாடசாலைகள் என்றும் ஏனையோருக்கு மற்றைய பாடசாலைகள் என்றும் ஓர் எண்ணம் தோன்றியுள்ளது. இது விடயத்தில் ஆசிரியர்களும் அதிபர்களும் கூட முன்மாதிரியாக நடந்து சொள்ள வேண்டும். உதாரணமாக எனது பாடசாலையில் கல்வி கற்ற எனது மகன் ஜீ.சி.ஈ. சாதாரணதரப்பரீட்சையில் திறமையான பெறுபேறுகளைப் பெற்றபின் நான் அவனை வேறு பாடசாலைக்கு மாற்ற விரும்பவில்லை. அவன் தொடர்ந்து எனது பாடசாலையிலேயே கல்வி கற்றதால் மற்றைய பெற்றோர்களும் தமது பிள்ளைகளை எனது பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு மாற்ற விரும்பவில்லை.

மற்றது பாடசாலைகளுக்கு வசதிகள் வழங்குவது பற்றிய பிரச்சினை. செல்வாக்கு மிக்க கல்லூரிகளுக்கு கூடிய வசதியும் செல்வாக்கில்லாத கல்லூரிகளுக்கு குறைந்த வசதியும் வழங்குவதாலும் பிரச்சினை ஏற்படுகின்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்பட்ட கல்விக் கண்காட்சி ஒன்றை கொழும்பில் பார்த்த ஞாபகம் வருகிறது. அக்கண்காட்சியில் ஒரு புறத்தில் பெரிய பாடசாலை ஒன்றில் மாணவர்கள் நீராடும் தடாகத்தில் குதித்து விளையாடுவதையும் மறுபுறத்தில் கிராமப் பாடசாலை ஒன்றில் மாணவர்கள் இருப்பதற்கு ஆசனங்கள் இல்லாமல் நிலத்தில் அமர்ந்திருப்பதையும் சித்தரித்துக் காட்டப்பட்டிருந்தது. அந்த நிலை இன்றும் நிலவுகிறது. இந்நிலை மாற வேண்டும். பெரிய பாடசாலை என்ற மோகத்தைக் குறைக்க சகல பாடசாலைகளிலும் சமமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கேள்வி: நீங்கள் இந்தியாவுக்குச் சென்று கல்வி நிர்வாகம் திட்டமிடல் ஆகிய துறைகளில் விசேட பயிற்சி பெற்று வந்திருக்கிறீர்கள். அங்கு நீங்கள் பெற்ற அனுபவங்களைக் கொண்டு கிராமப்புற மாணவர்கள் நகரப்புற கல்லூரிகளை நோக்கிச் செல்வதை எவ்வழிகளில் குறைக்கலாம் எனக் கருதுகிறீர்கள்.

பதில்: இந்தியாவில் மஹாராஷ்டிராவில் கல்வி மான்களும், பணம் படைத்தவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களுமாகச் சேர்ந்து ஒரு பாடசாலையைச் சுவீகரிக்கிறார்கள். அப்பாடசாலை சுவீகரிக்கப்பட்டபின் இவர்கள் எல்லோரும் சேர்ந்து அப்பாடசாலைக்கு வேண்டிய சகலவசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். நான்கு ஆண்டுகளுக்கு இப்பாடசாலை இவர்களின் கண்காணிப்பில் இயங்குகிறது இப்பாடசாலை தனித்து இயங்கக் கூடிய நிலையை எய்தியதும் அவர்கள் அப்பாடசாலையை மீண்டும் முன்னைய நிர்வாகிகளிடம் ஒப்படைத்து விடுகின்றனர்.

இது போன்ற ஒரு முயற்சியை நாம் இங்கும் மேற்கொள்ளலாம். ஆரம்பத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு பாடசாலையை வளர்த்திட அப்பகுதிநாடாளுமன்ற மகாணசபை உறுப்பினர்களின் உதவியோடு ஒவ்வொரு பாடசாலையைத்தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக வேண்டிய நிதியைப் பெற்றும் உள்ளூர் தனவந்தர்களின் நன்கொடைகளைப் பெற்றும் இப்பாடசாலைகளை உன்னத நிலைக்குக் கொண்டு வர முடியும். காலகெதியில் இது போன்ற பாடசாலைகளை ஒவ்வொரு கொத்தணி அமைப்பிலும் வளர்ப்பதன் மூலம் பெற்றோர்கள் 'பெரிய' பாடசாலைகளைத் தேடி அலைவதைக் கட்டுப்படுத்த முடியும்.

கேள்வி:- உங்கள் பாடசாலையை எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றை வாசகர்கள் முன் வைக்க விரும்புகிறீர்களா?

பதில்:- ஆம். 1960 ஆம் ஆண்டுகளில் வசதிக்கட்டணமாக மாணவரிடமிருந்து அறவிட அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட அதி கூடிய தொகை தவணைக்கு ரூ. 20/- ஆகும். இத்தொகையே இப்பொழுதும் பாடசாலைகளால் அறவிடப்படுவதாக இருத்தால், தற்பொழுது இப் பணத்தின் பெறுமதிதான் என்ன? 1800 மாணவர்களுக்கு மேலுள்ள எமது பாடசாலை போன்ற பாடசாலைகளில் வருடத்தில் வசதிக் கட்டணமாக ஒரு லட்சம் ரூபா வரை சேர்க்கலாம். ஆனல் செலவினங்கள் இரண்டு இலட்சம் ரூபா வரை ஏற்படும். எனவே மேலதிக ஒரு இலட்சம் ரூபாவையும் பாடசாலையே தேட வேண்டிய நிலை. சகல பாடசாலைகளுக்கும் இப் பிரச்சினை உண்டு. இதன் காரணமாகவும் சில பாடசாலைகளின் தரம் இறங்குகின்றது. எனவேதான் பாடசாலைகள் பெற்றோர்; பழைய மாணவர், நலன் விரும்பிகளின் தயவை எதிர் நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சில சந்தர்ப்பங்களில் வசதியுள்ள பெற்றோரிடமிருந்து நன்கொடை பெறுவது தவிர்க்க முடியாது. இந் நன்கொடைகள் யாவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலமே பெறப்படுகின்றன.



அ. பஞ்சலிங்கம்

பேட்டி: கதிரோன்

## கல்விக் கதிர்
### உதயன்-மாணவர், ஆசிரியர் சிறப்பகம்


**SCIENCE CENTRE**
**Karaveddy**
G. C. E (A/L) - 1989
**PAPER CLASS**
MR. M. PARANTHAMAN B.Sc (Hons)
- ZOOLOGY -
-: பொருளாதார விலங்கியல்:-
ஆரம்பம்: 18.03.1989 சனி(Saturday)
9.00–11.00 a. m
(C/1934)



**விக்னு டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
**A/L கலை, வர்த்தகம்.**
**91** புதிய பிரிவு 1- 4- 89
9. 00 A. m.
எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | | | |
|---|---|---|---|
| பொருளியல் | - திரு. கலாகரன் | தமிழ் | - திரு. குழந்தை |
| வர்த்தகம் | - திரு. இலங்கா | இந்துநாகரிகம் | - திரு. சுந்தரம்பிள்ளை |
| கணக்கியல் | - திரு. வன்னியசிங்கம் | புவியியல் | - திரு. குணராசா |
| அளவையியல் | - திரு. சுப்பிரமணியம் | அரசியல் | - திரு. மஃறூப் |

மு. கு: (1) மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.
(2) குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டும் அனுமதிகள் வழங்கப்படும்.
(C/1858)



**BECON**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**A/L 91**
கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| வர்த்தகம் | — | ரட்ணம் |
| கணக்கியல் | — | மரியதாஸ் |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | சுந்தரமூர்த்தி |

ஆரம்பம்: 19-03-89
ஞாயிறு காலை 10.30
(C/1095)


### வளரும் பயிர்கள்

# இளம் ஓவியக் கலைஞர் வாசுகி ஜெகநாதன்

'வளரும் பயிர்கள்' என்ற இந்தப் பத்தியில் எம் மத்தியில் உள்ள கலை இலகிய இளஞ் சுடர்களை அறிமுகப் படுத்துகின்றோம்.

இந்தவகையில் இளம் ஓவியர் செல்வி. வாசுகி ஜெகநாதன் பற்றிய அறிமுகம் இங்கே இடம் பெறுகின்றது.

**யாழ்.** பிரான்சிய நட்புறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவிய அரங்கேற்றம் இம்மாதம் 21 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை 1ஆம்குறுக்குத்தெருவிலுள்ள யாழ். பிரான்சிய நட்புறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான 2ஆம் வருட மாணவியான செல்வி வாசுகி ஜெகநாதன் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியாவார். பாடசாலை நாட்களில் ஓவிய ஆசிரியர் திருமதி M. P, R. சின்னப்புவின் ஊக்குவிப்பினால் ஓவியக் கலையில் ஈடுபாடு கொண்ட இவர் தொடர்ந்து ஓவியர் ஏ. மார்க்குவிடம் பெற்றுக்கொண்ட பயிற்சியினால் நவீன பாணி ஓவியங்களை இன்று நம் காட்சிக்கு வைக்கின்றார்.

செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவியங்களை அறிமுகம் செய்யும் சில குறிப்புக்களைத் தருகின்றேன்.

ஓவியர்கள் தமக்கென ஓர் தனிப்பாணியைக் கையாளும் பட்சத்திலேயே அவர்கள் சிறந்த படைப்பாளிகளாகின்றனர். இந்தவகையில் வாசுகியின் படைப்புக்கள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. மரணச்சுவடு, சக மனிதர், '2-2-89' விழிப்பு, போராளிகள், முடிவிடம் ஆகிய தலைப்புகளிலுள்ள ஓவியங்கள் சமகால நிகழ்வுகளைச் சித்தரிக்கின்றன. 'சக மனிதர்' என்ற ஓவியத்தில் மனிதரின் முகங்கள் சிதைவுகளாய்ச் சிதைந்து இன்றைய எம்மக்களின் மனத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இரசாயனவியலிற்குள் கற்றுக்கொண்டவற்றை ஓவியமாக்கி இருக்கும் ஓவியரின் திறமை இங்கு குறிப்பிட்டுக் கூறத்தக்கது. அதிர்வு, சமன்பாடு, கணிதக்குறியீடுகள் ஆகிய தலைப்புக்களில் கோடுகளையும், வர்ணங்களையும் லாவகமாகக் கையாண்டு விடயத்தைச் சிறப்பாக விளக்கியுள்ளார்.

மற்றும் யாழ்ப்பாண மண்ணின் பனைகளும், மணற்தரைகளும் ஓவியரின் படைப்புகளில் அழகுபெறுகின்றன. அல்லைப்பிட்டி, மணியம் தோட்டம், குருநகர் ஆகிய தலைப்புகளில் அமைந்திருக்கும் ஓவியங்கள் மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளன.

கிராமத்துக் காதலர்கள், நிழல்கள் ஆகிய இரண்டு ஓவியங்களும் இவரின் பேனைகளால் உருவாக்கப்பட்ட சிற்பங்களைத்தழுவியதாக அமைந்திருப்பதால் புதிய பாணியில் வரையப்பட்ட ஓவியங்களாக மிளிர்கின்றன.

இவர் ஓவியத்தில் காட்டிய அதேயளவு ஈடுபாட்டை சிற்பங்கள் செய்வதிலும் காட்டியுள்ளார். புதிய முறையில் பேனைகளை ஒட்டி சிற்பமாக்கியதுடன் சவர்க்காரத்திற் செதுக்கியும் சிற்பங்களைச்செய்துள்ளார். இவையும் கூட புதுமையானவையாகவும் நவீனத்துவம் வாய்ந்தனவாகவும் அமைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் சீரானமுறையில் இருக்காதபோதும்கூட, கடந்த மூன்றுவருடகாலமாக ஓவியக் கண்காட்சிகள் ஓரளவிற்கேனும் தொடர்ந்து நடைபெற்றுவருவது மகிழ்ச்சிதரும் விடயமாகும். இந்தவகையில் ஓவியர் A. மார்க்குவின்மாணவி செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவிய அரங்கேற்றமும் ஈழத்தின் ஓவியக்கலை வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுக்கொள்ளும் என்பதில் ஐயமில்லை.



வாசுகி ஜெகநாதன்

**அருந்ததி சபாநாதன்**

## வாசகர் திருமுகம்

# வலி மேற்கு மக்களுக்கு நியாயம் கிடைக்குமா?

புனர்வாழ்வு நிவாரணம் பெறுவதில் தாம் புறக்கணிக்கப்படுவதாகச் சங்கானைஉபஅரசஅதிபர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கவலைப்படுகின்றார்கள்.

பத்திரிகைச் செய்திகளின்படி வட்டுக்கோட்டைப் பிரதேச மக்கள் தவிர மற்றப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அநேகமாக முதல் கட்ட நிவாரணத்தையும் பெற்றுள்ளார்கள்.

ஒரே குடும்பம் விவசாய நிவாரணத்தையும் புனருத்தான நிவாரணத்தையும் பெற முடியாது என்று இப் பகுதி கிராம சேவகர்கள் மக்களுக்குக் கூறி வருகிறார்கள். முல்லைத்தீவு, கிளிநொச்சி மக்கள் இரண்டு நிவாரணங்களையும் பெற்றுள்ளதாக நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோம்.

அரசாங்க ஊழியர்கள், ஓய்வூதியக்காரர்கள், தனியார்கள் ஆகியோர் நிவாரணப்பணத்தைப் பெற முடியாது என்றும் தவறான தகவல் பரப்பப்படுகிறது.

ஆனல் யாழ்ப்பாணத்தின் பிற்பகுதிகளில் மட்டுமல்ல இங்கேயும் இத்தகைய பலர் நிவாரணப் பணத்தை ஏற்கனவே பெற்றுள்ளார்கள். வேதனை தருவது என்னவென்றால் உண்மையில் கொடுக்கப்பட வேண்டியவர்களுக்கு அது இன்னமும் வழங்கப்படவில்லை.

வலி மேற்கு மக்களுக்கு நிவாரண விடயத்தில் நியாயம் கிடைக்குமா?

வட்டுக்கோட்டை — வ. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.

N. C. A. பருத்தித்துறை
(ஆத்தியடி அருகாமை)

A/L கலை, வர்த்தகம்

ஆரம்பம்:- 18- 03- 89 சனி 9 a m

ECO:— க. கலாகரன்
LOG:— விக்கி
ACC:— S. K. பிரபாகரன்
COM:— R. ரகுநாதன், இரட்ணம்
H. CAL:— P. ஜோதீஸ்வரன்.
TAM:— கணபதிப்பிள்ளை.

(C/1930)


## சாக்குக் கேள்விக்கூறு

### துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

துணுக்காய்ப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக விற்பனைக்குண்டு. இதற்கான கேள்விக்கூறு விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் ரூபா 100/- வைப்புப் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். சாக்குகளைத் தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். கேள்விக்கூறு விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், துணுக்காய்ப் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், துணுக்காய் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் 25-3-89ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

முக்கிய குறிப்பு:-குறைந்த செலவில் சாக்கை ஏற்றிச் செல்வதற்கு எமது லொறி வாடகைக்கு விடப்படும்.

10-3-89 பொதுமுகாமையாளர்
(C/1918)


## 119 ஆவது தென்இந்திய யாத்திரை

ஆரம்பம்: 9- 4- 89 முடிவு: 28- 4- 89

யாத்திரைக் கட்டணம் ரூபா 3950/-

(இக்கட்டணம் இந்தியாவில் பிரயாணம் செய்வதற்கும், இரவுகளில் அறைகளில் தங்குவதற்கும் மாத்திரம். ஏனைய செலவுகள் தனி)

விபரங்களுக்கு:

★ விநாயகா டூர்ஸ் ★
(அரசாங்கப் பதிவு பெற்றது - 7753)

அதிபர் அ. வி. அருணாசலம்
இராஜநாயகி தியேட்டர், காங்கேசன்துறை.

திரு. R. சிவலிங்கம், 'ரத்னு மோட்டார்ஸ்'
55, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இன்னும் ஒன்பது [9] இடங்கள் மாத்திரமே இருக்கின்றன. உடனே தொடர்பு கொள்ளவும்.

[10009]


## மக்கள் முகம்

### வர்த்தக ஊழியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் வே. தியாகராசா, உப தலைவர்கள்' வே. கனகரத்தினம், வை. சந்திரகுமார், எஸ். றமீஸ், செயலாளர் தி. தியாகலிங்கம், இணைச்செயலாளர்: எஸ். என். பாலகிருஷ்ணன் உதவி செயலர் எஸ். சிறிதரன், தனாதிகாரி ந. நடராசா உதவி தனாதிகாரி: கே. கணேசமூர்த்தி.

பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகினர். (க)

### பாடசாலை அபி. சங்க நிர்வாகிகள்

சுன்னாகம், மார்ச் 16

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் அண்மையில் அதிபர் திரு.ஐ.நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு .ஐ. நவரத்தினம் (அதிபர்) செயலாளர் திரு. கே. விவேகானந்தன், தனாதிகாரி: திரு. பொ. கணேஸ்வரலிங்கம் (ஆசிரியர் உபதலைவர் திரு. சு. இராசநாயகம்.

ஒன்பது பேர் கொண்ட நிருவாக சபையும் தெரியப்பட்டது. (ச-72)

### விளையாட்டுப் போட்டி

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. சி. புலேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ச-90)


## வாடிக்கையாளருக்கு அறிவித்தல்

உங்களுக்குத் தேவையான தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலிக் கருவிகள், விவசாய கருவிகள் கொன்டெசா தையல் இயந்திரங்கள் மற்றும் மரத் தளபாடங்களைப் பின் வரும் பிரதான சிங்கர் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்:-

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

கண்டி வீதி,
சாவகச்சேரி.

கண்டி வீதி,
கிளிநொச்சி.

பிரதான வீதி,
பருத்தித்துறை.

கண்டி வீதி,
வவுனியா.

என். சீ. வீதி,
திருகோணமலை.

சிங்கர்*
மாசற்ற மேன்மை



# P. U. C. - நெல்லியடி.

A/L 91 கலை, வர்த்தகம்

ஆரம்பம்: 18- 3- 89 சனி 2 மணி

✶ ECO:- க. கலாகரன்
✶ LOG:- நவம், சோதி
✶ ACC:- S. K. பிரபாகரன்
✶ COM:- கேசவன்
✶ TAM:- யோகராஜா, நவம்
✶ H CUL யோகராஜா, குமுதினி

[C/1927]



## உடனடி வேலைவாய்ப்பு

1. ● சவூதி, ● குவைத் ● ஓமான் ● பெய்ரூட் ● தாய்வான்
2. ● யப்பான்

### வேலை வாய்ப்பு

(1) கட்டட மேற்பார்வையாளர்
(2) கட்டட மின்னிணைப்பாளர்
(3) எயர்கொண்டிசன் மெக்கானிக்
(4) பிளம்பர்
(5) வெல்டர்
(6) கம்பி கட்டுபவர்
(7) கிறேன் ஒப்பறேற்றர் (ரவர் கிறேன்)
(8) சவல் ஒப்பறேற்றர் (மேபின் கிறேன்)
(9) (F)போக்கிளிப் ஒப்பறேற்றர்
(10) தச்சு வேலையாட்கள்
(11) மேசன்
(12) சாரதிகள்
(13) கனரக வாகனச் சாரதிகள்
(14) சமையற்காரர்
(15) உதவிச் சமையற்காரர்
(16) கட்டடப் பகுதி கூலியாட்கள் உதவியாளர்

சம்பளம் —
500 அமெரிக்கன் டொலர்
● இரண்டு வருட ஒப்பந்தம்
● வயது: 20 — 42 வயது வரை

RESTAURANT

(17) உதவியாளர்
(18) வெயிற்றர்
● வயது 26க்குட்பட்டது

சம்பளம் —
700 அமெரிக்கன் டொலர்
● சாப்பாடும் தங்குமிட வசதியும், வைத்தியச் செலவுகளும் இலவசம்

மேலதிக விபரங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

# T. V. TRAVELS

Brown Foad,
KOKUVIL.

(C/1646)


## ஈராண்டு நினைவஞ்சலி



### நடராஜா இராஜேந்திரகுமார்

மண்ணுலகில்: 23 - 10 - 1969
விண்ணுலகில்: 16 - 03 - 1987

ஓடி மறைந்த தப்பா ஈராண்டு எங்கள் ரஞ்சா உன் முகம் காணுமல் ஏங்குதைய்யா எங்கள் நெஞ்சம் பாசத்துயரால் நாங்கள் தினம் பரிதவிக்கின்றோமே! உனக்காக என்றும் ஏங்கிடும் எங்கள் மனசு உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றதே.

துயருறும்:

ஐயா, அம்மா, அண்ணு, சகோதரிகள், அத்தான் [டென்மார்க்], அக்கா [டென்மார்க்], மருமக்கள், மாமாமார், உற்றூர், உறவினர்கள்.

(9842)


# SCIENCE CENTRE

KARAVEDDY


## A/L 91

✶ விஞ்ஞான பாடங்கள்
✶ 2 மாத விசேட ஆங்கில வகுப்பு

ஆரம்பம்: 18-3-89 சனி பி.ப. 3.30 மணி

(9980)


## ஈராண்டு நினைவஞ்சலி



### சபாரத்தினக்குருக்கள் இராமச்சந்திர ஐயர்

(சின்னக்குரு)

தோற்றம்:- 07-09-1930
மறைவு:- 08-04-1987

திதி: 16 - 03 - 1989

எங்கள் அன்புத்தெய்வத்தின் இரண்டாவது சிரார்த்த இத் தினத்தில் என்றும் உங்கள் பாதையில் எங்கள் பணி தொடரும் என்று கூறி ஆத்மா சாந்தியடைய மனமுருகி பிரார்த்திக்கிறோம்.

''சிரித்து சிரித்து சிந்திக்க வைத்த எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு எங்கள் நெஞ்சில்''

மனைவி: இராசலட்சுமி அம்மாள்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

சாரதாபீடம்
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(9999)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி முத்தையா இராசம்மா

அன்னையின் அணைப்பில். 06-04-1932
ஆண்டவன் அழைப்பில்: 27-03-1988

குன்றாக் குலவிளக்காய் குதூகலத்தை
எமக்களித்துப் பின் — குமுறும்
துயர் வெள்ளத்துள் அழுந்த விட்டுச் சென்று
ஆண்டொன்று சென்றதம்மா
ஆண்டு பல சென்றாலும் — அன்புத் தாயே!
உம் பிரிவுத் துன்பம் எமைவிட்டுப் பிரியாது.

இன்றைய நாளில் உங்களுடைய ஆத்மாசாந்தி அடைய எல்லாம் வல்ல பரம் பொருளை இருகரம் ஏந்தி இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

கணவன் - மக்கள் - மருமக்கள் - பேரப்பிள்ளைகள் - சகோதரர்கள்.

மண்கும்பான்,
4 ஆம் வட்டாரம்.

[10008]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

**பொருள்:-**

உட்பகை உள்ள குடும்பத்தில் உள்ளவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தாலும் அடுக்குப் பானைகள் போல ஒருவரோடு ஒருவர் ஒட்டாமல்தான் இருப்பார்கள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
16 - 03 - 1989 க. பெ. இல: 23

# கலாபவனங்கள் தேவை

யாழ்ப்பாண நகரில் கடந்த வாரத்தில் ஓர் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற சனாதனனின் அந்தக் கண்காட்சியைப் பலரும் கண்டு களித்தனர். அடுத்த வாரத்திலும் பல்கலைக்கழக மாணவியான செல்வி வாசுகி ஜெகநாதனின் ஓவியக் கண்காட்சி நகரில் இடம்பெற உள்ளது.

இது போன்ற தனிநபர் கலைக் கண்காட்சிகள் நிறைய நடைபெற வேண்டும். அவற்றுக்கு, அந்தந்தத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் மட்டுமன்றி கலா ரசிகர்கள் அனைவரும், ஏனையோரும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தல் அவசியம்.

கலைகள், அவை எவையாக இருப்பினும், மக்கள் ஆதரவில்லாமல் வளர முடியாது. கலைத்திறமை உள்ள ஓர் கலைஞரை இனங்காணுதல், ஆர்வம் ஊட்டுதல், வளர்த்தல் என்பன போன்ற பல கட்டங்களிலும் மக்களது ஊக்குவிப்பும், உந்துசக்தியும் தேவை.

ஓவியங்கள், சிற்பங்கள் உட்பட சகல கலை வடிவங்களும் மக்கள் மனதுக்கு இதமூட்டுபவை; மனக் கவலைகளை மறக்கச் செய்பவை.

கலை வடிவங்களைக் கண்டு ரசிப்பதும், கேட்டு இன்புறுவதும் வெறும் பொழுதுபோக்கல்ல; மனதுக்கு நிம்மதியும், அறிவுக்கு விருந்துமாகும். அதனால் கலைகள் மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகிவிட்டன.

வளமும், வனப்பும் மிக்க வாழ்க்கைச் சூழ்நிலையில் கலைகளை வளர்ப்பதை விட, மன விரக்தியும், வரட்சியும், மிகுந்த வாழ்க்கைச் சூழ்நிலையில் அவற்றை ஆதரிப்பது தான் மிக முக்கியம்.

ஏனெனில் வரண்டுபோன, நலிந்துபோன வாழ்க்கைச் சூழ்நிலையில் தான் சிந்தனை விழிப்புணர்வும், செயல் உத்வேகமும் மக்கள் மனங்களிலும், வாழ்க்கையிலும் பொங்கிப் பிரகாசிக்கும்.

கலைஞர்களும் அதற்கு விதிவிலக்கல்லர். அவர்களது சிந்தனையும், கற்பனையும் புதிய தேடல்களை நாடி ஓட அற்புதமான கலைவடிவங்களைப் படைப்பார்கள்.

அவற்றை வெறும் கலை வடிவங்களாக மட்டும் கொள்ளலாகாது. காலக்கோலங்களின் பிரதிபிம்பங்களாகவும், காலப் பதிவுகளாகவும் கருதுதல் வேண்டும்.

இன்றைய நிகழ்வுகள் நாளைய வரலாறுகள். அந்த வரலாறுகளைப் பதிந்து அடுத்த பரம்பரைக்கு வழங்குபவை இலக்கியம், ஓவியம், சிற்பம் உட்பட்ட கலைகளும் வரலாற்று நூல்களுமேயாம்.

எனவே இந்தக் காலவேளையில் விழிப்புணர்வுடன், புத்தெழுச்சியுடன் சிருஷ்டிக்கப்படும் கலைகளை ஆதரிப்பதை மக்கள் ஒரு கட்டாய கடமையாகக் கொண்டாலும் தப்பில்லை.

சகல கலைத்துறைகளிலும் ஆக்கப்படும் சிருஷ்டிகளை மக்கள் காண்பதற்குக் கண்காட்சிகள் உதவுகின்றன. ஆனால் கண்காட்சிகளை நடத்துவதற்கு என்று தமிழ்ப் பிரதேசங்களில் கலைக்கூடங்கள், கலாபவனங்கள் இல்லை. தென்பகுதியில் பல கலாபவனங்கள் உள்ளன. ஆனால் வடக்கிலோ, கிழக்கிலோ ஒன்று தானும் இல்லை.

கலைஞர்கள் தமது படைப்புகளைப் பிரசித்தப்படுத்தவும், மக்கள் அவற்றைக் கண்டு களித்து ரசித்து, ஆதரிக்கவும் தமிழ் மாவட்ட நகரங்களில் கலாபவனங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். அந்தந்தப் பகுதி மாநகராளுமன்றங்கள், நகராளுமன்றங்கள் இது விடயத்தில் கவனம் செலுத்துதல் அவசியம்.

பாச்- மாணவர் கண்டுபிடிப்பு

# கம்பியூட்டர் 'வைரஸை' அழிக்கும் மருந்து

இஸ்லாமபாத், மார்ச் 15

கம்பியூட்டர்களின் செயல்பாடுகளைச் சீர்குலைக்கும் 'கம்பியூட்டர் வைரஸுக்கு' தக்க மாற்று மருந்து' (சாதனம்) கண்டுபிடித்துள்ளதாக 2 பாகிஸ்தானிய மாணவர்கள் தெரிவித்தனர்.

இதற்காக அவர்கள் உருவாக்கியுள்ள அமைப்பிற்குப் பெயர் 'சிபிரைன் ஸ்ட்ரிப்பர்.'

'சிபிரைன் வைரஸ் வீடுகளிலும், சிறு வர்த்தக நிறுவனங்களிலும் பயன்படக் கூடிய ஃப்ளாப்பி டிஸ்க் (தகவல் பதிவு இல்லை) களைச் சீர்குலைக்க வல்லது.

கம்பியூட்டர் திருட்டைத் தடுக்க இந்த 'வைரஸ்' உருவாக்கப்பட்டது.

ஆனால் இது அதிமுக்கியமான தகவல் புள்ளி விவரங்களையும் அழித்துவிடக் கூடியது.

இதற்கு மாற்று மருந்தாக 'சிபிரைன்ஸ்ட்ரிப்பரை' இந்த மாணவர்கள் கண்டு பிடித்துள்ளனர். இவர்கள் கராச்சி பொறியியல் தொழில் பல்கலைக்கழக மாணவர்கள். ஆஸிப் ஹபீப், நதீப் கஃபி என்பது அவர்களுடைய பெயர்கள்.

இந்த மாற்று சாதனம் மூலம் லாகூரில் கம்பியூட்டர் தகவல் பதிவு சீர்குலைவைத் தடுக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

கம்பியூட்டர் வைரஸ்பற்றிய விளக்கம் வருமாறு:

கம்பியூட்டர்களில் விபரங்கள், தகவல்கள் 'டிஸ்க்' (வட்டத் தகடுகள்) களில் பதிவு செய்யப்படுகின்றன. இதில் வைரஸ் என்பது ரகசியமாக நடுப்பகுதியில் பதிவு செய்யப்படும் தவறான கம்பியூட்டர் கட்டளைகளாகும். இது சம்பந்தமின்றி தகவல்களை குழப்பவல்லது. புள்ளி விவரங்களையும் அழிக்கக் கூடும். அதுமட்டுமின்றி இந்த தவறான ரகசியக் கட்டளைகள் தானாக பிற 'டிஸ்க்குகளுக்கும் பதிவாகி விடக்கூடும். (எ - 9)

ஆப்கன் கெரில்லாக்களிடம் இருந்து

# ஸ்ரிங்கர் ஏவுகணைகளை திரும்பப்பெற அமெரிக்க அரசு நடவடிக்கை

## தவறானவர்களின் கைகளுக்கு போய்விடும் என்று அச்சம்

நியூயார்க், மார்ச். 15

ஆப்கன் கெரில்லாக்களுக்கு வழங்கிய ஸ்ரிங்கர் ஏவுகணைகளை திரும்பப் பெறுவது என்று அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

கெரில்லாக்களிடமிருந்து அவற்றை எப்படித் திரும்ப எடுப்பது பற்றிய திட்டம் ஒன்றைத்தயாரிக்க அமெரிக்க வெள்ளைமாளிகைஉயர் அதிகாரிகள்குழுஒன்று ஈடுபட்டுள்ளது.

கெரில்லாக்களின் கைகளில் இருந்து இந்த ஏவுகணைகள் ஆயுத விற்பனையாளர்கள் அல்லது வேறுதீவிரவாதக் குழுக்களின் கைகளுக்கு போய் விடலாம் என்ற அச்சத்தினால் தான் அமெரிக்க அரசு இந்த நடவடிக்கையை எடுத்து வருகிறது.

ட்ரக்குகள், வைத்திய சாதனங்கள் மற்றும் தோளில் வைத்து பாவிக்கும் ரொக்கெட்டுக்களை வழங்கி, அவற்றுக்கு பதிலாக ஸ்ரிங்கர் ஏவுகணையைத் திருப்பித் தருமாறு கெரில்லாக்களைக் கேட்பது பற்றி இக்குழு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

ஆனால் கெரில்லாக்கள் அந்த ஏவுகணைகளை திருப்பிக்கொடுக்கவே மாட்டார்கள் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிராங்க் கருல்லசி தெரிவித்தார்.

அமெரிக்க உளவுஸ்தாபனத்தின் அறிக்கைப்படி ஆப்கன் கெரில்லாக்களிடம் 200 முதல் 500 வரை ஸ்ரிங்கர் ஏவுகணைகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இது விஷயமாக பாகிஸ்தானின் உதவியை அமெரிக்கா நாடவுள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் மிகச்சக்தி வாய்ந்த விமான எதிர்ப்பு ஏவுகணை ஸ்ரிங்கர் ரகம் என்று சொல்லப்படுகிறது.

ஆப்கன் கெரில்லாக்களுக்கு 1986 முதல் அமெரிக்கா இந்த ரக ஏவுகணையை வழங்கி வந்தது. (எ)

ஜலலபாத் மோதல் காரணமாக

# 17ஆயிரம் ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானில் மீண்டும் தஞ்சம்

இஸ்லாமபாத், மார்ச். 15

ஆப்கனிஸ்தானில் இருந்து அகதிகள் பெரும் எண்ணிக்கையில் பாகிஸ்தானுக்கு செல்ல ஆரம்பித்திருப்பதாக இஸ்லாமபாத் அரசு நேற்று அறிவித்தது.

ஒரு நாளில் மட்டும் 17ஆயிரம் ஆப்கன் அகதிகள் பெஷவார் சென்றனர்.

ஆப்கன் பிரச்சினை ஆரம்பமான பின்னர் கடந்த 6 ஆண்டுகளில் ஒரே நாளில் இவ்வளவு ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தது இதுவே முதல்தடவையாகும்.

கெரில்லாக்களின் முற்றுகைக்கு ஆளாகி இருக்கும் ஜலலபாத் நகரைச் சுற்றி வசிப்பவர்களே இடம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

9 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் இராணுவம் ஆப்கனுக்குள் நுழைந்த பின்னர், 30 லட்சம் ஆப்கன் அகதிகள் பாகிஸ்தானிலும் 20 லட்சம் அகதிகள் ஈரானிலும் தஞ்சமடைந்தனர்.

புதிதாக வரும் அகதிகளைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு எடுத்துள்ளது. (எ)

# மத்திய கிழக்குப் பிரச்சினை; அமெ.- இஸ்ரவேல் பேச்சு

வாஷிங்டன், மார்ச்.15

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நேரடிப் பேச்சுக்களை நடத்த இஸ்ரவேல் தயாராக இருக்கவேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்திருக்கிறது.

வாஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கரை இஸ்ரவேல் வெளியுறவு அமைச்சர் ஆரன் நேற்றுச் சந்தித்தார்.

அப்போதே அமெரிக்காவின் இக்கருத்தை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்தார்.

நேரடிப் பேச்சுக்களை இருதரப்பினரும் நடத்துவதன் மூலம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வைக் காணமுடியும் என்றும் அமெரிக்க அமைச்சர் பேக்கர் தெரிவித்தார். [எ]

# லெபனனில் கடும் சண்டை நாற்பது பேர் மரணம்

லெபனனில் கிறிஸ்தவ படையினருக்கும் முஸ்லிம் படையினருக்கும் இடையே ஏற்பட்டுள்ள கடும் சண்டையில் 40 பேர் உயிரிழந்தனர்.

150 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

முஸ்லிம் படையினருக்கு சிரியாவின் அரசுப்படை உதவுவதாக கிறிஸ்தவ படைவீரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ)

# இஸ்லாமிய மாநாட்டில் ஆப்கனிஸ்தான் பிரச்சினை

ரியாத், மார்ச் 15

ஆப்கனிஸ்தான் கெரில்லாக்கள் அமைத்துள்ள இடைக்கால அரசை அங்கீகரிக்கும்படி இஸ்லாமிய நாடுகளை சவூதி அரேபியா கேட்டுள்ளது. 45 இஸ்லாமிய நாடுகளின் வெளி நாட்டமைச்சர்கள் மாநாட்டில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆப்கன் கெரில்லா அரசின் வெளியுறவு அமைச்சரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

கெரில்லா அரசை முதலில் அங்கீகரித்த நாடு சவூதி அரேபியா. பின்னர் சூடான் அங்கீகரித்தது.

எழுத்தாளர் ருஷ்டியின் பிரச்சினைக்கு இம்மாநாட்டில் முதலிடம் அளிக்கப்படவில்லை. (எ)

மத்திய கிழக்கு

# புதிய யோசனையுடன் வருக! இஸ்ரவேலுக்கு புஷ் புத்திமதி

வாஷிங்டன், மார்ச் 15

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய யோசனைகளைக் கண்டுபிடிக்கும்படி இஸ்ரவேலை அமெரிக்கா கேட்டிருக்கிறது;

வாஷிங்டனில் இஸ்ரவேல் பாதுகாப்பு அமைச்சர் [illegible] நேற்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்தார். அப்போதுதான் இக்கோரிக்கை விடப்பட்டது.

சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுதற்கு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் [illegible] [illegible] குறைக்கும்படியும் [illegible] கேட்டிருக்கிறார். (எ)

# இடைத் தேர்தல் முடிவு பற்றி கலைஞர் கருணாநிதி கருத்து

சென்னை, மார்ச் 15

மருங்காபுரி, மதுரைகிழக்கு தொகுதிகளில் தி. மு. க. தோல்வி அடைந்ததுபற்றி முதலமைச்சரும் தி. மு. க. தலைவருமான கலைஞர் கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

சுயேச்சை வேட்பாளர்கள் மரணமடையாமல் ஜனவரி 21ஆம் திகதி தேர்தலுடன் இவற்றிற்கும் தேர்தல் நடந்திருந்தாலும் இதேமுடிவுகள் தான் வந்திருக்கும்.

ஆகவே இத்தேர்தல் முடிவுகள் குறித்து பெரிதாக அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

எதிர்க்கட்சிகள் சட்டசபையில் பலத்தை அதிகரித்திருப்பதுகுறித்து மகிழ்ச்சியடைகின்றேன்''.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

# ருஷ்டிக்கு எதிரான வழக்கு லண்டன் நீதிமன்று நிராகரிப்பு

லண்டன், மார்ச், 15

பிரிட்டனின் 'தெய்வ நிந்தனைச் சட்டத்தின் கீழ் எழுத்தாளர் சால்மன் ருஷ்டியைத் தண்டிக்கக்கோரி லண்டன் மாஸ்திரேட் நீதிமன்றம் ஒன்றில் முஸ்லிம் நடவடிக்கைக் குழு தொடர்ந்த வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

'சாத்தானின் கவிதைகள்' நூல் முஸ்லிம்களைப் புண்படுத்துவதாக முஸ்லிம் நடவடிக்கைக்குழு தனது மனுவில் குற்றஞ்சாட்டியிருந்தது.

மனுவை நிராகரித்து நீதிபதி தீர்ப்பளிக்கையில் 'பிரிட்டனின் தெய்வநிந்தனைச் சட்டம் கிறிஸ்தவ மதத்தை நிந்தனை செய்பவர்களைத் தண்டிக்கவே கொண்டுவரப்பட்டது' — என்று குறிப்பிட்டார்.

முஸ்லிம் குழுசார்பாக இலவசமாக வாதாடிய முஸ்லிம் பாரிஸ்டர்கள் மூவர் சாத்தானின் கவிதைகள் நூல் முஸ்லிம்களை மட்டுமல்ல, கிறிஸ்தவர்களையும் புண்படுத்தியுள்ளது. அதன்மூலம் பிரிட்டனை அவமதித்துள்ளது — என்று வாதாடினர்.

அதற்கு நீதிபதி, 'பிரிட்டிஷ் அரசை அந்த நூல் புண்படுத்தவில்லை' — என்று பதிலளித்தார்.

ருஷ்டிக்கு எதிராக நீதிமன்றமொன்றில் வழக்கு தொடரப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக முஸ்லிம் நடவடிக்கைக் குழு அறிவித்திருக்கிறது. (எ)

# ஆப்கன் வீரர்கள் பணயக் கைதிகள்

இஸ்லாமபாத், மார்ச் 15.

ஆப்கன் நகர் ஜலலபாத்தைக் கைப்பற்றும் சண்டையின்போது 70 ஆப்கன் அரச படையினரைப் பணயக்கைதிகளாக பிடித்துள்ளோம் என்று கெரில்லாக்கள் அறிவித்திருக்கின்றனர். (எ)

# துப்பாக்கி இறக்குமதிக்கு அமெரிக்க அரசு தடை

வாஷிங்டன் மார்ச் 15

துப்பாக்கிகள், மது, புகையிலை ஆகியவற்றை இறக்குமதி செய்ய அமெரிக்கா தடை விதித்து உள்ளது.

அமெரிக்கா வர்த்தக அமைச்சர் நிக்கலஸ் பிரேடி இதனை தெரிவித்தார்.

போதை வஸ்து கடத்துபவர்கள் ரைபிள், இயந்திரத் துப்பாக்கிகளை கணக்கு வழக்கின்றி இறக்குமதி செய்து குற்றச் செயல்களைப் புரிவதற்கு பயன்படுத்துவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

அதைத் தொடர்ந்தே இத்தடை கொண்டு வரப்பட்டதாக அமைச்சர் பிரேடி அறிவித்தார்.

இது தற்காலிகத் தடை எனவும் பின்னர் மீளாய்வு செய்யப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

### பழங்கள் ஏற்றுமதி நிறுத்தம்

சிலியில் இருந்து பழங்கள் அமெரிக்கா, ஜப்பான், கனடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டது.

ஏற்றுமதி செய்யப்பட்ட பழங்கள் சிலவற்றில் சைனயிட் நஞ்சு கலந்து இருக்கக் காணப்பட்டதாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்தே இத் தடை விதிக்கப்பட்டது. (எ)

கருணாநிதிக்கு ஜெயலலிதா பதில்:

# அ.தி.மு.க. கணக்கு திறந்த புத்தகம்; திகில் கதைக்கு அங்கு இடமில்லை

சென்னை, மார்ச் 15

அ.தி.மு.க.வின் இருஅணிகளும் இணைந்ததற்குப் பேரமாக ஜானகி அம்மாளிடம் இருந்து ஜெயலலிதாவுக்கு ரூ. 1½ கோடி கைமாறியுள்ளது என்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறியதுபற்றி ஜெயலலிதா ஒரு அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.

அதில் கூறப்பட்டு இருப்பதாவது:-

அ.தி.மு.க. நிதி கணக்குகளைப் பற்றி முதல்வர் கருணாநிதி தனது கற்பனைத் திறன் கொண்டு கதை சொல்லத் தொடங்கி உள்ளார்.

'சி.பி.ஐ.' என்று மிரட்டுகிறார். இவரது மிரட்டலுக்கு அஞ்சும் கோழைகளல்ல நாங்கள்.

எங்களது கட்சியின் கணக்குகள் திறந்த புத்தகம்.

அங்கே திகில் கதைகளுக்கு இடம் இல்லை.

நடந்து முடிந்த தேர்தலின் போது தேர்தலில் போட்டியிட விரும்பிய கழகத்தவர், தாமே முன் வந்து கட்சியின் தேர்தல் நிதியாக தொகைகள் செலுத்தினர். அதனை நேரடியாக வங்கி பெற்றுக் கொண்டது. இன்று அதே வங்கியின் மூலமே உரியவர்களுக்குபணம் திருப்பி தரப்படுகிறது.

'பெரியம்மா பணம் சின்னம்மாவுக்கு கை மாறியது' என்று கருணாநிதி வக்கணை புரிகிறார்.

இது பெரியம்மா பணமும் அல்ல. சின்னம்மாவுக்கு சேரவும் இல்லை.

இது கட்சியின் பணம். கட்சிக்காக செலவிடப்படுகிறது. இதில் கருணாநிதியாருக்கு என்ன ஆதங்கமோ தெரியவில்லை.

நடந்துமுடிந்ததேர்தலுக்கு முன் கருணாநிதி மீது மத்திய அமைச்சர் ஒருவர் புகார் கூறினார்.

தி.மு.க. வசம் உள்ள நகராட்சி, மற்றும் பஞ்சாயத்துக்கள் சார்ந்த ஒப்பந்தகாரர்களை மிரட்டி பெருமளவு கட்டாய வசூல் நடத்துகிறது. கருணாநிதி கட்சியினரின் இந்த செயல் குறித்து 'சி.பி.ஐ.' விசாரிக்கும் என்று மத்திய இணை அமைச்சர் ப. சிதம்பரம் கூறினார்.

இதற்கு பதில் அளித்த கருணாநிதியார் — 'சி.பி.ஐ.' காட்டி சின்னப்பையன் என்னை மிரட்டுகிறார்' என்று சீறினார்.

அவரது வார்த்தைகளிலே குறிப்பிடுவதானால் — 'மக்கள் கொடுத்தார்கள். நான் பெற்றுக் கொண்டேன். கணக்கு கேட்க நீ யார்?' என்றுதான், தாம் கட்டாய வசூல் செய்த ஐந்து கோடிக்கு கணக்கு கேட்ட நேரத்தில் கருணாநிதியாரின் பதில் அமைந்திருந்தது.

அந்த கருணாநிதிதான் இன்று அ.தி.மு.க.வின் தெளிவானநிதி கணக்குகளில் சந்தேகங்களை கிளப்பி குட்டை குழப்பமுயலுகிறார்.

மீண்டும் ஆட்சி அதிகாரம் வந்துவிட்டது என்பதற்காக அவதூறு கிளப்பி அழிக்க நினைக்கிறார்.

அதிகார போதையில் அவர் சீண்டி பார்ப்பாரானால் அவரை சந்திக்க வேண்டிய வகையில் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அவதூறு சர்ச்சைகளில் அவர் முயலுவாரானால் — நாங்கள் உண்மைகளின் பலத்தில் ஊரைத்திரட்டி சந்திக்க தயார்.

முந்திய ஏழு ஆண்டு கால கருணாநிதி ஆட்சியில் நடந்த பல முக்கிய ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு அவர் இப்போது பதில் சொல்லியேதீர வேண்டிய கால கட்டத்தை ஏற்படுத்துவோம்.

நான் எனது உடல் நலக்குறைவு காரணமாக ஓய்வு எடுப்பதைகூட இவர் கேலி பேசுகிறார். கருணாநிதியும் அவரது சகாக்களும் உடல் நலக்குறைவால் ஓய்வு எடுத்தது இல்லையா?

தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பார்கள். இவர்கள் ஓய்வு பெறும் காலம் வரும். அன்று மற்றவர்கள் கேலி பேசினால் தாங்கிக் கொள்வார்களா?

சி.ஐ.டி. க்களை குவித்து என்னை கண்காணிக்க இவர் யார்? எங்களது கட்சியின் நிதி கணக்குகளை கேட்கஇவர் என்ன எங்கள் கட்சியின் எஜமானரா? இவரை கேட்டுக் கொண்டுதான் நாங்கள்ஆட்சி நடத்த வேண்டுமா?

என்னைப் பொறுத்தவரை நான் எந்த அரசு பதவியையும் வகித்தது இல்லை. சில்லறைக் காசு லஞ்சம் வாங்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை. தவறான வழியில் சொத்துக்களைச் சேர்த்ததும் இல்லை.

ஓர் ஆட்சி ஏற்பட்டதும் குறைந்தது மூன்று மாதம் அவர்களுக்கு அவகாசம் தரவேண்டும் என்ற அரசியல் நாகரிகத்தலதநாம் கடைபிடித்தால் அவர்கள் அதனையே பலவீனமாக கருதுவது சரியல்ல.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதை விடுத்து மக்களைத் திருப்ப கருணாநிதி யார்? தவறான வழிமுறைகளை கையாளுவாரானால் அவரை சந்திக்க வேண்டிய வகையில் அ. தி. மு.க. நிச்சயம் சந்திக்கும் என்பதனை இதன் மூலம் உணர்த்த விரும்புகிறேன்.

இவ்வாறு ஜெயலலிதா கூறியுள்ளார். (எ-9)

## வெளி உலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ பட்டுப் பிடவைகள்
✶ பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

உதயன்

16 - 03 - 1989 வியாழக்கிழமை

சேட்டிங் சூட்டிங்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கு
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை : யாழ்ப்பாணம்

## கள்ள நோட்டு அச்சடித்த பிக்குவிற்கு சிறை! அபராதம்!!

கொழும்பு, மார்ச் 16

நூறு ரூபா கள்ள நோட்டு அச்சடித்தது, அதனை வைத்திருந்தது ஆகிய குற்றங்களுக்காக பிக்கு ஒருவருக்கு 5 ஆண்டு கால சிறைத்தண்டனையும், 50 ஆயிரம் ரூபா அபராதமும் கொழும்புமேல் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

அபராதத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருடச் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி நீதிபதி வால்டர் வைத்தியரத்ன, பிக்குவிற்கு உத்தரவிட்டார்.

நூறு ரூபா கள்ள நோட்டுக்களாக 2 லட்சத்து 84 ஆயிரம் ரூபா பணத்தைத் தனது பெயரில் தபாற் கந்தோர் ஒன்றின் சேமிப்புக் கணக்கில் போட முயற்சித்த சமயம் பிக்கு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். (உ-எ)

## இந்திய உதவிப் பொருள்கள் யாழ். கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 16

இந்திய உதவித் திட்டத்தின்கீழ் வடக்கு, கிழக்கு மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள உதவிப் பொருள்களை திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வந்து விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

யாழ். செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

திருகோணமலையில் உள்ள மேற்படி பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு லொறிகளை அனுப்பும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று யாழ். செயலகத்தில் இந்த விடயம் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும் செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-5)

புனித. சவேரியார் (ஆண்கள்)
கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான

### விசேட பொதுக் கூட்டம்

இடம்:- டிலாசால் இல்லம், மன்னார்.
காலம்:- 21 – 03 – 89 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி
நோக்கம்:- அமரர் சங் சகோ கில்லறி ஜோசப் அவர்கள் நினைவாக நிலையான செயற்றிட்டங்கள் உருவாக்கல்.

பழைய மாணவர்கள் அனைவரையும்
✶ அன்புடன் அழைக்கின்றோம், ✶

கல்லூரி அதிபர்
[10011]

### அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 29-3-89இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். வருடாந்த மகோற்சவ நாட்களில் தற்காலிக கடைசளை அமைக்க விரும்புவோர் மேற்படி ஆலயத்தில் 19-3 89 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கும் 12. 00 மணிக்கும் இடையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும். ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பக்காரர் உடனடியாக வாடகைப்பணம் முழுவதையும் செலுத்த ஆயத்தமாக வரவும்.

- ஆலய நிர்வாகத்தினர்
(10065)

### மரண அறிவித்தல்

#### கனகசபை பொன்னையா

சிறுப்பிட்டியைச்சேர்ந்த கனகசபை பொன்னையா அவர்கள் 14-3-89இல் காலமாகிவிட்டார். இவர் இராசமணியின் அன்புக்கணவரும், காலம்சென்ற இராசதுரை, காலம் சென்ற கனகசபை, காலஞ்சென்ற சோதிதவமலர், கனகலிங்கம், கனகநாயகம் (பப்பன்), கனகசுந்தரம், கமலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், பரமேஸ்வரி, கமலாதேவி (சுவிடன்), சிவராசா (டோகா) ஆகியோரின் அன்பு மாமனும், ராதிகா, றஜீவன், றஜீனு, ஆகியோரின் அன்புப்பேரனும் வேலுப்பிள்ளையின் (இளைப்பாறிய தபால்அதிபர்) அன்புச் சகோதரனுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16- 3- 89) பிற்பகல் 3. 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்பமயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

முருகன் ஸ்ரோஸ் (பப்பன்),
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(9873)

இப்பத்திரிகைநியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2, இல் உள்ள அச்சகத்தில் 16- 03-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சொகுசு பஸ்

யாழ்ப்பாணம் மார்ச் 16

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குபுதிய ''இசுஸு'' சொகுசு பஸ் ஒன்று நேற்று கொண்டுவரப்பட்டது.

மற்றொரு பஸ் இன்னும் சில தினங்களில் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ - 10 ]

## தீ விபத்தில் இறந்தவர் யார்?

யாழ்ப்பாணம், மார்ச் 16

மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த ஒருவர் தீக்காயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுகடந்த திங்கட்கிழமை மரணமானார்.

அவரது சடலத்தை அடையாளம் காண உதவும்படி யாழ் வைத்தியசாலைப் பொலீஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாவடியில் உள்ள பேக்கரி ஒன்றில் கடமையாற்றி வந்த அவர் (பத்மநாதன் என அழைக்கப்படுபவர்) தீவிபத்து ஒன்றில் சிக்கி பலத்த எரிகாயங்களுக்கு உள்ளானார்.

யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர், அங்கு மரணமானார். (ஒ-9)

## மின்கம்பி வீழ்ந்து வேலிகள் எரிந்தன

பச்சிலைப்பள்ளி மார்ச் 16

முகமாலை இந்திரபுரத்தினூடாகச் செல்லும் பிரதான மின் கம்பத்திலிருந்துமின்கம்பி ஒன்று கழன்று தொங்கியதால் இப்பகுதியிலுள்ள பல வேலிகள் எரிந்தன. இவ்வழியாக வந்த இந்தியப் படையினர் தீயை அணைத்தனர். (ஒ - 117 )

## 5 நாட்களின் பின் மரணம்

யாழ்ப்பாணம் மார்ச் 16

மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் சிக்கிக்கொண்ட நபர் ஒருவர் ஐந்து நாட்கள் மயங்கிய நிலையில் இருந்து நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

நல்லூரைச்சேர்ந்த க. பிறேமகுமார் (வயது 39 ) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவர் யாழ் மாநகரசபை ஊழியர் என்று தெரிவிக்கப்பட்டது. ( ஒ - 10 – 88 )

## யாழ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

5 சத வீதத்தால் அதிகரித்திருப்பதாகவும், விபத்துக்களில் சேதமுறும் வாகனங்களுக்கான காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்கு பொலீஸ் அறிக்கை அவசியம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்களில் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் உள்ள போக்குவரத்துப் பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

## 3 இளைஞர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவருகிறது.

பின்னர் மூன்று இளைஞர்களது சடலங்களையும் அமைதிப்படையினர் ஆலயத்தில் கூடி இருந்த மக்களிடம் கொண்டுவந்து அடையாளம் காட்டுமாறு கோரியதாகவும் அறியவருகிறது.

இச்சடலங்கள் பின்னர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று இளைஞர்களின் விபரம் வருமாறு:-

1. சாந்தன் (ராஜன்) – வயது 20
2. பிரேமதாஸ் (குட்டி) – வயது 18
3. சொரூபன் (சார்ள்ஸ்) - வயது 20

இதேவேளை இப்பகுதியில் வீடு ஒன்று குண்[illegible] தகர்க்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (உ-10)

## இன உறவை அழித்து நாம் செய்த பாவத்தினால் இன்று துன்பப்படுகிறோம்

### ஜனாதிபதி பிரேமா விசனம்

கொழும்பு, மார்ச் 16

பல இன மக்களிடையே பல்லாண்டுகளாக நிலவிவந்த நல்லெண்ணத்தை அழித்து நாம் பெரிய பாவம் செய்து விட்டோம். அதற்காகத்தான் நாம் இன்று துன்பப்படுகிறோம்.

ஜனாதிபதி பிரேமதாஸ முன்கண்டவாறு சொன்னார்.

கொழும்பு சென்யோசப் கல்லூரி அளித்த வரவேற்பு வைபவத்திற்கு பதிலளித்துப் பேசுகையிலேயே ஜனாதிபதி இப்படிச் சொன்னார்.

வருங்காலத்தில் இன ஒற்றுமையை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட தான் தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதி சொன்னார்.

எமது பாடசாலை நாட்களில் மொழி, இன, மத பேதங்கள் கிஞ்சித்தும் கிடையா. ஒரே வாங்கில் சகல இனமாணவரும் ஒன்றாக அமர்ந்து இருந்து படித்தனர்.

நானும் ஏனைய இனங்களைச் சேர்ந்த 3 மாணவரும் ஒரே வாங்கில் அமர்ந்திருந்து படித்தோம்.

இன பேதமே எங்கள் உள்ளங்களில் அன்று இடம்பெறவில்லை.

ஒருவரின் வீட்டிற்கு மற்றவர்கள் சென்று வந்தனர். ஒவ்வொருவரின் பெற்றோரும் மற்றவர்களை வரவேற்று உபசரித்தனர்.

அந்த பாசம், நல்லெண்ணம் ஆகியவற்றை நாம் ஏன் இழந்தோம்?

இழந்த அந்த உறவை நம்மால் புதுப்பித்துக்கொள்ள முடியாதா? முடியும். அதை முடித்துக்காட்டுவேன் என்று நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன் -என்றார். (உ-எ)

## ஜெயவர்த்தனாவின் வீட்டிற்குள் நுழைய முயன்றவர் கைது!

கடந்த 10ஆம் திகதி மாலை முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் வீட்டினுள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை சி. ஐ. டி. பொலீஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் சந்தேக நபரான எஸ். சி. அழகக்கோன் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிவான் சந்தேக நபரை வருகிற 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (உ-எ)

## முல்லைத்தீவில் நள்ளிரவில் தாக்குதல் சம்பவங்கள்

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு நகர எல்லைக்குள் நேற்று முன்தினம் இரவு 7.30 மணி முதல் நள்ளிரவு 12 மணி வரை ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றன. இதனால் நள்ளிரவில் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

முல்லைத்தீவு பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த முல்லைத்தீவு உணவுக் களஞ்சியக் காவலாளியான எஸ். பூபாலசிங்கம் என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி பலத்த காயத்துடன் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மணற்குடியிருப்பு வாசியான எஸ். நவரத்தினம் என்பவரும் ஷெல் தாக்குதலில் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். பல வீடுகள் சேதமடைந்தன.

இந்தச் சம்பவங்களில் ஏற்பட்ட உயிரிழப்பு, மற்றைய சேதங்கள் ஆகியவை குறித்து ஊர்ஜிதப்படுத்தக்கூடிய தகவல்கள் ஏதும் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை (உ-92)

## லொறியில் நசியுண்டு கிளீனர் மரணம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 16

ப. நோ. கூ. சங்கத்துக்கு பொருள்களை ஏற்றி வந்த கிளீனர் அந்த லொறியின் சில்லினுள் அகப்பட்டு மரணமானார்.

கடந்த திங்கட்கிழமை முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இயந்திரக் கோளாறினால் லொறி பழுதடைந்தது என்றும் - மேட்டுப் பகுதியில் இருந்து பள்ளத்தை நோக்கி அந்த லொறி சறுக்க முனைகையில் கிளீனர் கட்டையைப் போட்டு தடுக்க முயன்ற போதே இந்த விபத்துச் சம்பவம் நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-126]

## ஆடைகள் கண்காட்சி

யாழ்ப்பாணம், மார்ச் 16

வடமராட்சி இந்துக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை தைக்கப்பட்ட ஆடைகளின் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரால் [illegible] கப்படும். அவை விற்பனைக்கு உரியவை அல்ல. (அ)

## மீண்டும்.......

தும் அரசாங்க சபைகள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ராஜினாமாச் செய்யுமாறு கேட்கப்பட்டுப்புதியவர்கள் நியமிக்கப்பட்டனர்.

அந்த வகையில் திரு. நடராசாவே பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். (அ]

## விபத்தில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விபரம் வருமாறு: சின்னத்தம்பி இராசா (வயது 61— கொக்குவில்) இரத்தினம் இராசேந்திரம் (வயது 52— யாழ்ப்பாணம்) நடராசா உமாநேசன் (வயது 19 —நெடுந்தீவு)

இரத்தினம் இராசேந்திரம் நள்ளிரவு வேளை மரணமானார். (ஒ-10)

## நிதி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு 210 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி, கலாசாரம்: 630 கோடி ரூபா.

மின்சக்தி, எரிபொருள்: 500 கோடி ரூபா.

பாதுகாப்பு: 890 கோடி ரூபா.

மூலதனச் செலவுக்கு ரூ. [illegible]50 கோடி.

காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி 520 கோடி ரூபா. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. தியாகராஜா பத்மராஜா

கொக்குவிலைச் சேர்ந்த தி. பத்மராஜா (ஆங்கில ஆசிரியர்) காலமானார்.

இவர் திருமதி அகிலேஸ்வரிதேவி (ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், காலம் சென்ற திரு. தியாகராஜா (முன்னை நாள் தபால் அதிபர்), திருமதி தியாகராஜா ஆகியோரின் அன்பு மகனும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலம் சென்ற திரு. திருமதி சபாபதி நாகலிங்கம் அவர்களின் மருமகனும், காலம் சென்ற திருமதி பரமேஸ்வரி செல்வரத்தினத்தின் அன்புச் சகோதரரும், M. சின்னத்தம்பி (முன்னாள் ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), இராஜரட்ணம் (M. R,) அவர்களின் பெருமகனும், சி. சிவஞானத்தின் மருமகனும், காலம் சென்ற திரு. செல்வரத்தினம் [Sales officer, Cement Co-Op), மகேஸ்வரி அப்பாத்துரை, நாகேஸ்வரி நாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரீ கௌரி, ஸ்ரீ ரெங்கா, ஸ்ரீ தர்மா, ஸ்ரீ றஞ்சனி, ஸ்ரீ மதி, ஸ்ரீ ராம், ஸ்ரீ பார்த்தன், ஸ்ரீ கரன், ஸ்ரீ தயாபரி ஆகியோரின் அன்பு மாமனும், ஏகசிருங்கேஸ்வரி, ஹரிஹரன் ஆகியோரின் சிறிய தகப்பனும், அதிபர், ராகுலன், மாலினி, அருள்மொழி, தெய்வேந்திரம் ஆகியோரின் மாமனும், பிரசாந்தன், திவிசாந்தன், பிருந்தாரூபி, துவாரகாரூபி, லவன், நிலோஷின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை 18-03-89 இல் அவருடைய இல்லத்தில் நடைபெற்று பகல் பத்து மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அகிலேஸ்வரிதேவி பத்மராஜா.

புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(9876)

### திரு. க. தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், வளலாய்)

வளலாய் அச்சுவேலியில் வசிக்கும் திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்) 15-03-89 புதன் கிழமை சிவபதமடைந்துள்ளார்

இவர் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக்கணவரும், திருமதி மகாலட்சுமி குமரகுருலிங்கம் (N.A.B முன்னாள்மொழிபெயர்ப்பாளர்], திருமதி விஜயலட்சுமி கருணாமூர்த்தி (கனடா), திரு. கணேசமூர்த்தி (அவுஸ்திரேலியா), திரு. சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கி. குமாரகுருலிங்கம் [கூட்டுறவுப் பரிசோதகர்), திரு. க. கருணாமூர்த்தி (கனடா), திருமதி க. அஞ்சலா (அவுஸ்திரேலியா), திருமதிசிவரூபி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் பூதவுடல் 16-3-89 (இன்று) வியாழக்கிழமை பி ப. 2 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து வளலாய் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. குமரகுருலிங்கம்.
(மருமகன்)

வளலாய்,
அச்சுவேலி.
(9874)

### கார்த்திகேசு பிரேம்குமார்

புங்குடுதீவு 11-ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பிரேம்குமார் (எழுதுவினைஞர், மாநகர சபை யாழ்ப்பாணம்) 15-3-89 ல் அகாலமரணமடைந்தார். இவர் திருமதி பிரேம்குமார் சுசிலாவின் (ஆசிரியை, கோண்டாவில். ம. வித்தியாலயம்) அன்புக் கணவரும், பிரேம்ஜியின் அருமைத் தந்தையும், புங்குடுதீவு கணேச ம. வி. இளைப்பாறிய அதிபர் நா. கார்த்திகேசு தம்பதிகளின் அருமை மகனும், நயினாதீவு காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் இ. சரவணமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும், கா. பரமேஸ்வரன் (ஆசிரியர் - நெடுங்கேணி மகாவித்தியாலயம்), திருமதி பிரேமலதா சுந்தரலிங்கம், திருமதி ஸ்ரீலதா சிவஞானசுந்தரம் [ஆசிரியை புங்குடுதீவு க. ம. வி.) ஆகியோரின் சகோதரரும், தி. சுந்தரலிங்கம் (புகையிரத நிலைய அதிபர் வவுனியா) K. சிவஞானசுந்தரம் (ஆசிரியர் புனிதமண்டால் வித்தியாலயம் கொழும்பு), திருமதி விஜயகுலராணி பரமேஸ்வரன் (ஆசிரியை மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்) திருமதி சு. மெய்யழகன், செல்வி சுகுணா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஐ. மெய்யழகன் (அம்பாள் ஜுவலர்ஸ் - கொழும்பு) அவர்களின் சகலரும், அனுராஜ், அனுசா, தனராஜ் பகிராஸ் ஆகியோரின் தாய்மாமனும், பாபுஜி, சுரூஜி, சந்ஜி, சைந்தவி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிகிரியைகள் 16-3-89 வியாழன் காலை 11-00 மணியளவில் நயினாதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. மெய்யழகன்
நயினாதீவு - 2
10020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org